Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 009 | சனிக்கிழமை | கார்த்திகை 20ஆம் நாள் 05 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## ‘கார்த்திகைப் பூ’ ஒரு வரிப் பதில்!

கொழும்பு, டிசெ.5
மாவீரர் நாள் அன்று பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முன்ப குதியில் கார்த்திகைப் பூ ஒளிரச் செய்யப்பட்டமை பொலிஸாருடன் தொடர்பு 19

## எங்கு மழை அதிகம்?

யாழ்ப்பாணம், டிசெ.5
இலங்கையில் கடந்த புதன்கிழமை காலை 8.30லிருந்து 24 மணித்தியாலங்களில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகிய இடம் மற்றும் அளவு தொடர்பில் குழப்பம் காணப்படுகின்றது.
கிளிநொச்சி அக்கராயனில்தான் 19

# 68,000 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெம்பர் 5
புரேவி புயல் தாக்கம் மற்றும் சீரற்ற காலநிலையால் வடக்கு மாகாணத்தில் 20 ஆயிரத்து 717 குடும்பங்களைச் சேர்ந்த 68 ஆயிரத்து 630 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 13

## வேடிக்கை பார்த்த மாணவனை அடித்துச் சென்றது குளத்து நீர்!

வவுனியாவில் சோகம்



வவுனியா, டிசெ.5
வவுனியா, புதுக்குளத்தில் உள்ள குளத்தைப் பார்ப்பதற்காகச் சென்ற மாணவன் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். அவரைத் 19

## நந்திக்கடலில் மாயமான மீனவரின் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, டிசெ.5
நந்திக்கடலில் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்த மீனவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டு ள்ளார். ஜெயசீலன் சிலக்சன் (வயது-26) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். 19

## கரவெட்டியில் மாணவன் குளத்தில் மூழ்கிச் சாவு!



யாழ்ப்பாணம், டிசெ.5
குளத்தில் மூழ்கி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நுணுவில் குளக்கட்டுப் பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள குளத்தில் 19

## குளங்களின் நீர் மட்டம் கனமழையால் உயர்வு!

கிளிநொச்சி, டிசெ.5
இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 26 அடியை எட்டியுள்ளது. நேற்றுக் காலை 9 மணியளவில் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 26 அடி ஒரு அங்குலமாக இருந்தது. 36 அடி கொள்ளளவு உடைய இரணைமடுக் குளத்துக்கான நீர் வருகை நேற்றுக் குறைந்திருந்தது.
எனினும் மக்கள் அவதான 19

# தருத்தது தவறில்லை செய்தது மிகத் தவறு

### ராஜபக்ச அரசு துடுக்குப் பதில்



கொழும்பு, டிசெ.5
நாட்டின் அரசமைப்பை மீறி - சட்டங்களை மீறி வடக்கு, கிழக்கில் தாம் நினைத்த மாதிரிச் செயற்படும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்தான் அரசிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 19

## கிளி. பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.5
கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக தற்காலிக விடுமுறை வழங்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் மற்றும் காரைநகர் இந்துக் கல்லூரி என்பன 19

## தனிமைப்படுத்தலை முடித்த வவு. இளைஞருக்குத் தொற்று

வவுனியா, டிசெ.5
வவுனியா கல்மடு ஈஸ்வரிபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா உறுதி செய்யப் 19

## வாய்க்கு வந்தவற்றை கூறக்கூடாது வீரசேகர!

### சம்பந்தன் பதிலடி

கொழும்பு, டிசெ.5
தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது கொண்ட கொள்கையில் - வரித்துக்கொண்ட இலட்சியத்தில் தடம்புரளாது பயணிக்கும். அதை எவரும் பிளவுபடுத்த வும் முடி 20

## வழிப்பறிக் கொள்ளையனை தேடிப் பிடித்தது பொலிஸ்!



யாழ்ப்பாணம், டிசெ.5
கொள்ளை மற்றும் வழிப்பறிகளுடன் தொடர்புடைய ஒருவர் தெல்லிப்பளையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் திருட்டு நகைகளை வாங்கிய 20

## நேற்றும் 517 பேருக்கு ‘கொரோனா’ தொற்று

கொழும்பு, டிசெ.5
இலங்கையில் நேற்றும் 517 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
பேலியகொட கொத்தணி தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே இவ்வாறு 19

‘கொரோனா’ சாவு
130
விரிவு பக்.20

## சட்டவிரோத பதாகையை அகற்றியதால் நெருக்கடி!

யாழ்ப்பாணம், டிசெ.5
நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானவர்கள் உரிய முறையில் அனுமதி பெறாது வைத்த கட்சிப் பாதாகை ஒன்றை 19

# பாடசாலைகளைக் குழுக்களாக்கி நட்பு ரீதியான போட்டிகளை நடத்தவும்

## பாரம்பரிய விளையாட்டுக்களை நடத்துமாறும் வடக்கு ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணித்தார்

**யாழ்ப்பாணம், டிசெ. 5**

**பாடசாலைகளைக் குழுக்களாக்கி அவற்றின் மாணவர்களுக்கிடையே நட்பு ரீதியான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதோடு, பாரம்பரிய விளையாட்டுக்களை அடையாளப்படுத்தி கிராம ரீதியாக அவற்றை முன்னெடுத்து, அழியாதவாறு பாதுகாக்கவேண்டும் அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் அதிகாரிகளுக்குப் பணித்தார்.**

கல்வித்துறைக் கொள்கை அறிக்கை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில், அவருடைய அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, கலை, கலாசாரத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை சார்ந்த பிரச்சினைகள், எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகள் அடங்கிய கொள்கைகளை துறைசார் அலுவலர்கள் ஆளுநரிடம் தெளிவுபடுத்தினர்.

இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராம மட்டங்களிலான இளைஞர் குழுக்களை உருவாக்கி அவர்களை விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்களாக்கி விளையாடுவதற்கான வழிமுறைகளை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

பாடசாலை மட்டத்திலேயே மாணவர்களின் கலைசார் திறைமைகளை அடையாளப்படுத்தி அவர்களுக்கான குழுக்களை அமைத்து திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். என்று தெரிவித்தார்.

**மாணவர்களின் ஆளுமையை பரீட்சையில் அளவிடமுடியாது**

பரீட்சைகள் மூலமாக மாணவர்களுடைய புத்திசாலித்தனம் மற்றும் ஆளுமை என்பனவற்றை அளவிட முடியாது. ஆகவே அவர்களுடைய அடைவுமட்ட குறைபாடுகளுக்கான சரியான காரணங்களைக் கண்டறிந்து அவற்றில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பால்நிலை சமத்துவம் வர்க்க வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்காது ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி ஆகியனவற்றில் பாடவிதான புறநிலை மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு அறிவூட்டுதல் வேண்டும். அதன் மூலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கலாம் என்று ஆளுநர் தெரிவித்தார்.

**குழு உருவாக்கவேண்டும்**

மேலும் பாடசாலைகளை சமூக மட்டத்தில் கட்டியெழுப்புவதற்கு பெற்றோர், பாடசாலைகளுக்கு அருகில் உள்ள சமூகத்தில் வசிப்பவர்கள், மதகுருமார்கள் மற்றும் அரச அலுவலர்கள் இணைந்து குழு ஒன்றை அமைத்து அதனூடாகச் சில விடயங்களை முன்னெடுக்கவேண்டும்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70புள்ளிகளைவிடக் குறைவாகப் பெற்ற மாணவர்களில் விசேட கவனம் செலுத்துவதோடு தரம் 9 மாகாணப் பொதுப் பரீட்சையில் 40 புள்ளிகளைவிட குறைவாகப் பெறும் மாணவர்கள் மீதும் விசேட கவனம் செலுத்தி அவர்களுடைய அடைவு மட்டங்களை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

மாணவர்களை வங்கி, மாவட்டச் செயலகம், தபால் நிலையம், ரயில் நிலையம் போன்றனவற்றுக்கு அழைத்துச்சென்று அதன் செயற்பாடுகள் பற்றி அறிவூட்டுவது அவசியமாகும். சமூகத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுடைய பங்கு முக்கியமானது என்பதோடு தகைமை உள்ள ஆசிரியர்களை மட்டுமே முன்பள்ளி ஆசிரியர்களாக அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

கலந்துரையாடலில் பிரதம செயலர், ஆளுநரின் செயலாளர், உதவிச் செயலர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் மற்றும் கல்வித் துறைசார் அலுவலர்கள் கலந்துகொண்டனர். (த)

# இரணைதீவிலுள்ள மக்களுக்கு கடற்படை உதவியுடன் உணவு



கிளிநொச்சி, டிசெ. 5

இரணைதீவில் தங்கியுள்ள மக்களுக்கு கடற்படையினரின் உதவியோடு நேற்று உணவு வழங்கப்பட்டது என்று கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 134பேர் 2 பாதுகாப்பான அமைவிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நேற்றுச் சென்று பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது என்றும் தெரிவித்தார்.

குளங்களுக்கு தண்ணீர் வருகையால் சில குளங்கள் நிறைந்துள்ளன. தொடர்ச்சியாக மழை பெய்தால் தண்ணீரைத் திறந்து விடவேண்டிய நிலை ஏற்படும். எனவே மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்துமுறை மக்கள் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தபோதிலும் அவர்கள் முகாம்களில் தங்குவதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை.

கொரோனா காரணமாக இயன்றளவு நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் என்று செயலர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்புபவர்கள் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு உதவிசெய்யுங்கள் என்று மேலும் தெரிவித்தார். (த6,222)

# வேலையில்லாப் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வு வரும்!

## நாடாளுமன்றில் அமைச்சர் நாமல் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 5

இளைஞர், யுவதிகள் எதிர்நோக்கும் வேலையில்லாப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்காக விசேட வேலைத்திட்டங்களை அரசு வகுத்துள்ளது என்று இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் 4.4 மில்லியன் பேர் வரையிலானோர் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். அவர்களில் 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் இளைஞர், யுவதிகளாவர்.

இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப்போன்று தற்காலிக வேலைவாய்ப்புகளை வழங்காது நிரந்தர வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கே அரசு நடவடிக்கை எடுக்கும்" என்றார். (த22)

# பஸ் மீது வீழ்ந்த வீதியோர மரம்





கிளிநொச்சி, டிசெ. 5

கிளிநொச்சி ஏ9 வீதியில் பொது மருத்துவமனைக்கு முன்பாக மரம் சரிந்து, பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் மீது வீழ்ந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

அதனால், பஸ்ஸின் கூரைப்பகுதியில் சிறு பாதிப்பு ஏற்பட்டது. எனினும், பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

பின்னர் அந்த மரம் வெட்டி அகற்றப்பட்டது. (த6,214,ரி2)

# வர்த்தமானியில் விலைக்குறைப்பு நடைமுறையில் எதுவுமில்லை

## சுட்டிகாட்டுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, டிசெ. 5

அத்தியாவசியப் பொருள்களின் விலைக் குறைப்புகள் வர்த்தமானியுடன் நின்று விடுகின்றதே தவிர மக்களுக்கு கிடைப்பதில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இன்னமும் எமது மக்கள், குறைந்த விலையில் அரிசியைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் அதிக விளைச்சல் கண்டுள்ளதாக அரசுகம் தெரிவித்துள்ள போதிலும், அரிசிக்கான நிர்ணய விலையை கொடுக்க முடியவில்லை என கூறினார்.

மக்களுக்கு தரமான நுகர்வுப் பொருள்களை பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் அரசு ஆட்சி செய்கின்றது என்றும் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய உற்பத்தியை பலப்படுத்துவோம் என்று அரசு கூறினாலும் அதற்கான வரிக் கொள்கை யொன்று நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்றும் அநுரகுமார திசாநாயக்க மேலும் கூறினார். (த-இ)

# கிளாலியில் 100ஏக்கரை நாசம் செய்த 'புரேவி'

கிளிநொச்சி, டிசெ. 5

கிளாலி பகுதியில் கடல் நீர் உட்புகுந்ததால் சுமார் 100 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலம் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிளாலியிலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடற்கரையை அண்டிய இந்தக் கிராமத்தில் வளமான விவசாய நிலங்களும் காணப்படுகின்றன. மக்கள் ஆண்டுதோறும் மழையை நம்பி மேற்கொள்ளப்படும் காலபோக செய்கை மற்றும் மானாவரி செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புரேவி புயல் காரணமாக கடல் அலைகளின் சீற்றம் அதிகரித்துக் காணப்பட்டதுடன், கடலும் தரைப் பகுதிக்குள் கணிசமாக வந்தது. இதனால் காலபோக விவசாயத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகளின் காணிகளில் உவர் நீர் உட்புகுந்துள்ளது. விவசாய நிலங்கள் உவராக மாறியுள்ளன. பயிர்கள் தற்போது முழுமையாக மூடப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

(ஓ,6)

# அந்தமானுக்கு வடமேற்கில் மற்றொரு தாழமுக்கம் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 5

வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு வடமேற்கில் இன்னொரு தாழமுக்கம் உருவாகுவது உறுதி.

இது தொடர்பான தெளிவான தகவல்களை இன்று மாலை அல்லது நாளை காலை அறியக்கூடியதாக இருக்கும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

அந்தமான் தீவுகளுக்கு வடமேற்கில் எந்த இடத்தில் உருவாகும் அது என்ன நிலைமையில் உருவாகும் என்பன போன்ற தெளிவான எதிர்வுகூறல்களை இன்று மாலை அல்லது நாளை காலை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இது தாழமுக்கமாக இருக்குமா? அல்லது புயலாக மாறுமா? என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் அல்லது 10ஆம் திகதிகளில் தெரியவரும்- என்றார். (ஒ,5)



# மீண்டும் புலிக்கதை தொடங்கியது அரசு

## இலங்கையில் உறுதிப்பாடற்ற நிலைமை உருவாக்க முயற்சியாம்

**கொழும்பு, டிசெ. 5**

**"வெளிநாடுகளில் உள்ள புலி உறுப்பினர்கள், இலங்கையில் உறுதிப்பாடற்ற நிலைமையை உருவாக்குவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றனர். இதற்காக முன்னாள் போராளிகளையும், வறுமையில் இருப்பவர்களையும் அவர்கள் இலக்குவைக்கின்றனர். அவர்களின் திட்டங்கள் கடந்த காலங்களைப்போன்றே முறியடிக்கப் படும்'' இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா சூளுரைத்தார்.**

முன்னாள் பெண் போராளியொருவர் கிளைமோருடன் கைதுசெய்யப்பட்டார் என பாதுகாப்புத் தரப்பினர் கூறும் சம்பவம் தொடர்பில் நேற்று விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலிகள் அமைப்பில் சிறிது காலம் இருந்த பெண்ணொருவரே யாழ்ப்பாணம் இயக்கச்சி பகுதியில் இருந்து கிழக்கை நோக்கி கிளைமோரை தனது கணவர் மற்றும் குழந்தை சகிதம் எடுத்துச் சென்றுள்ளார். இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் இதனை கண்டுபிடித்தனர். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் பெண்ணின் வீட்டுக்குப் பின்பகுதியில் இருந்து கைக்குண்டும் மீட்கப்பட்டுள்ளது.

2009இல் புலிகள் அமைப்பை இலங்கை நிலப்பரப்பில் நாம் தோற்கடித்தோம். எனினும், வெளிநாட்டில் வாழும் புலி உறுப்பினர்கள் புலிகளின் பிரிவினைவாத கருத்தாடலுக்கு உயிர்கொடுக்கின்றனர். உள்நாட்டிலுள்ள சிலரும் அதற்கு ஒத்துழைக்கின்றனர்.

வடக்கில் உறுதிப்பாடற்ற நிலையை உருவாக்குவதே அவர்களின் இலக்கு.

இதற்கு முன்னரும் முயற்சித்தனர். அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இனியும் அதற்கு இடமளிக்கப்படாது. அவர்களால் முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் தோற்கடித்து நாட்டையும், மக்களையும் பாதுகாப்போம்.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். வறுமையில் வாடுபவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு பணம் வழங்கியே உறுதிப்பாடற்ற நிலைமையை உருவாக்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. என்றார். கொரோனா ஒழிப்பு, மஹர சிறைச்சாலை தாக்குதல் என்று இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடு தென்னிலங்கையில் தலை தூக்கியுள்ள நிலையில் மேற்படி கிளைமோருடன் பெண் கைது தொடர்பான செய்தி சிங்கள ஊடகங்களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,44)

# புரேவி புயல் தாழமுக்கமாகியது

யாழ்ப்பாணம், டிசெ. 5

இலங்கையின் வடபகுதியை தாக்கிய புரேவி புயல் வலுக்குறைந்து தற்போது தாழமுக்கமாகி, மன்னார் வளைகுடாவில் நிலைகொண்டுள்ளது என, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கில் நிலைகொண்டிருந்த புரேவி புயல், கடல் பகுதியில் மணிக்கு 18 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்தது.

கடந்த 2ஆம் திகதி இரவு முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தின் ஊடாகப் புயல் தரையைத் தொட்டது.

அதன் பின்னர் புயல் வலுவிழக்கத் தொடங்கியது. மந்தமாகவே நகர்ந்தது. நேற்று முன்தினம் இரவு மன்னாரைக்கடந்து மன்னார் வளைகுடாவுக்கும், தமிழகத்துக்கும் இடைநடுவில் நிலைகொண்டுள்ளது. புயல் வலுவிழந்து தாழமுக்கமாக மாறியுள்ளது. வடக்கின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு கனமழை பெய்யும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தது. புயல் வலுவிழுந்து தாழமுக்கமாக மாறியதால் கனமழை பெய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)



# வவுனியாவில் வான்பாயும் 117 குளங்கள்

வவுனியா, டிசெ.5

புரேவி புயலால் பெய்த கனமழையால் நீர் மட்டம் அதிகரித்தமையால் வவுனியாவில் 117 குளங்கள் வான் பாய்கின்றன.

4 குளங்கள் உடைப்பெடுப்பதைத் தடுக்கும் வகையில் வெட்டி விடப்பட்டுள்ளன என கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏ-9 வீதி, சாஸ்திரிகூழாங்குளம், உக்கிளாங்குளம், கோதாண்டார் நொச்சிக்குளம், நெடுங்கேணி போன்ற பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள் ளன.

கோதாண்டர் நொச்சிக் குளத்தில் ஆலயம் ஒன்றில் நின்ற புளியமரம் விழுந்ததில் ஆலயம் சேதமடைந்துள்ளது. நெடுங்கேணி வைத்தியசாலையும் காற்று மற்றும் மழை காரணமாக பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

(வ-18)

## கிளிநொச்சியில்

# இறுதிச் சடங்குக்கு வருகைதந்த பெண்ணின் கணவருக்கு தொற்று

கிளிநொச்சி, டிசெ. 5

கிளிநொச்சி திருவையாறில் கடந்த இரு வாரங்களுக்கு முன் இடம்பெற்ற தாயின் இறுதிச் சடங்குக்கு கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவிலிருந்து வந்த பெண்ணுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவரது கணவருக்கு இரண்டாவது பி.சி. ஆர். பரிசோதனையில் நேற்று முன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த பெண்ணுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவரது கணவருக்கும் இரண்டு வாரங்களுக்கு முன் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது தொற்றில்லை என முடிவுகள் வெளிவந்திருந்தன.

ஆனால் 14 நாள்களுக்கு பின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று இருப்பது நேற்று முந்தினம் இரவு உறுதிசெய்யப்பட்டுள்ளது. முல்லேரியாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இறுதிச் சடங்குடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 20பேரும் மேலும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். (ஓ.இ)



புரேவிப் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான அதிகாரிகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ-9)

மஹர சிறை களேபரம்:

# கொல்லப்பட்ட கைதிகளின் சடலங்களைத் தகனம் செய்யாதீர்!

## அரசிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 5**

**மஹர சிறைச்சாலை வன்முறையில் படுகொலை செய்யப்பட்ட கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தாலும், மரண விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்களின் சடலங்களைத் தகனம் செய்ய வேண்டாம்.**

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கைதிகள் வன்முறையில் ஈடுபடுவதற்குப் பிரதானமாக மூன்று காரணங்கள் உள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சிறையில் காணப்பட்ட நெரிசல், கொரோனா தொடர்பான பயம் மற்றும் அதற்கு எதிரான போராட்டம் ஆகியவையே பிரதான காரணம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரமணி முத்தெட்டு வேகம குறிப்பிட்டுள்ளார். கடந்த நவம்பர் 29 ஆம் திகதி நடந்த மோதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு மஹர சிறைச் சாலைக்குச் சென்று இரண்டு தடவைகள் விசாரித்ததைத் தொடர்ந்து முதற்கட்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், மஹர சிறைச்சாலை உள்ளிட்ட சிறைகளில் நெரிசலைக் குறைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய கைதிகளை சிறைகளுக்கு அழைத்து வரும்போது, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும், கைதிகளின் உடல் நலம் மற்றும் சிகிச்சையில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கைதிகள் மத்தியில் அச்சத்தைக் குறைக்க வேண்டுமாயின் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளுக்கும் தனிச் சிறை மற்றும் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றால் உயிர் அபாயத்தில் உள்ள கைதிகள் மற்றும் சிறிய தவறுகளுக்குத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ,22)

யாழ். பல்கலையில்

# உயிரியல் ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் 6 இல்!

யாழ்ப்பாணம், டிசெ.5

யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையின் மாணவர்களுக்கான உயிரியல் ஆராய்ச்சி மாநாடு நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

உலக வங்கி அனுசரணையுடன், எஹெட் திட்ட நிதியுதவியின் கீழ் இளநிலைப்பட்ட மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் முகமாகவும், நவீன விஞ்ஞான களத்துக்கு மாணவர்களை வெளிப்படுத்துவதைக் கருத்தில் கொண்டும் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

முதன் முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி மாநாட்டில், யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறை மாணவர்களால், உயிரியல் விஞ்ஞானம் சார்ந்த 14 ஆராய்ச்சிச் சுருக்கங்கள் வெளியிடப்படவுள்ளன.

இவை விலங்கியற்றுறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளால் மதிப்பாய்வு செய்யப்பட்டவையாகும்.

இந்த நிகழ்வில் நாட்டிங்காம் பல்கலைகழகத்தைச் சேர்ந்த சுவர்ப்பியல் நிபுணர் பேராசிரியர் சாரா, சிலந்தி வலைகள் பற்றிய தமது ஆய்வு பற்றி நிகழ்நிலையில் உரையாற்றவுள்ளார்.

இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது ஆய்வு மையமான பூச்சியியல் ஆராய்ச்சி மையம் விலங்கியல் துறையின் ஆய்வாளர்களால் பிரேரிக்கப்பட்டு இப்போது திறம்படச் செயற்பட்டு வருகின்றது. (ற)



கண்டாவளை உமையாள்புரம் பகுதியில் புரேவி புயலால் பாதிக்கப்பட்ட 41 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் மற்றும் எஸ். கோகுலராஜா, கிராமசேவையாளர் உள்ளிட்டோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். (வ-6)

## மருத்துவ பயிற்சிகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

நடுவண் சுகாதார அமைச்சின் 'மருத்துவ விடயங்களுக்கான நிறைவு காண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பயிற்சிகளுக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்படிவ முடிவு திகதி இம் மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2017 மற்றும் 2018ஆம் கல்வியாண்டுகளில் க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்துறையில் சித்தியடைந்தவர்கள் இப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மருத்துவ விடயங்களுக்கான நிறைவு காண் தொழில் வல்லுநர் சேவையைச் சேர்ந்த மருந்தாளர், தொழில்சார் சிகிச்சையாளர் மற்றும் கதிரியியலாளர் ஆகிய மூன்று பாடநெறிகளுக்கும் துறை மருத்துவ சேவையைச் சேர்ந்த பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், கண் தொழில் நுட்பவியலாளர், செயற்கை அவயங்கள் தொழில்நுட்பவியலாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், இதயத் துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர், பொதுச் சுகாதார ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் பல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய ஒன்பது பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆங்கிலமொழி மூலம் இரண்டு வருட காலம் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சிக்கான விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விவரங்களை www.health.gov.lk என்னும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## சுற்றுலா விடுதிகள் மீண்டும் திறப்பு

வன உயிரிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் மற்றும் முகாம்கள் அனைத்தும் நேற்று முன்தினம் முதல் மீளதிறக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் மூன்றாவது அலை காரணமாக இவை கடந்த ஒக்ரோபர் மாதம் மூடப்பட்டன. ஒ.இ

# பாடசாலைகளுக்கு இலவச மீள்சுழற்சி கொள்கலன்கள்

## பிரதமரிடம் சுற்றாடல்துறை அமைச்சர் கையளிப்பு

கொழும்பு, டிசெ.5

பயன்பாடற்ற காபன் பேனாக் குழாய்கள் மற்றும் பற் தூரிகைகளை பாதுகாப்பாக மீள் சுழற்சி செய்வதற்காக சுற்றாடற்துறை அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் சுழற்சி கொள்கலனை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமர வீரவால் பிரதமர் அலுவலகத்தில் வைத்து மீள்சுழற்சி கொள்கலன் பிரதமரிடம் வழங்கப்பட்டது. 'இது சட்டம் அல்ல ஒழுக்கம்' என்ற எண்ணக்கருவுக்கமைய செயற்படுத்தப்படும் இந்த சுற்றாடல் பாதுகாப்பு சார்ந்த திட்டத்தை நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் செயற்படுத்துவது காலத்தின் தேவையாகும் என பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பாவனையின் பின்னர் ஒதுக்கப்படும் 3 ஆயிரம் கார்பன் பேனாக் குழாய்கள் மற்றும் 500 பற்தூரிகைகளை இந்த ஒரு கொள்கலனில் இடமுடியும். இந்த கொள்கலன் அனைத்து பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்படுவதுடன், INSEE நிறுவனம் மற்றும் அட்லஸ் நிறுவனத்தினால் அவை கொள்வனவு செய்யப்படவுள்ளன. (ந)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அதிகாரத்துக்காக பலியிடப்படும் அப்பாவிகள்

மீண்டும் புலிப்பூச்சாண்டி காட்ட இலங்கை அரசு படு வேகமாகக் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளது. ஏனெனில் முன்னைய ராஜபக்சக்களின் ஆளுகையின் போது எந்தப் பாதகச் செயலையும் அரசால் பயமில்லாமல் செய்யமுடிந்தது. ஏனெனில் எல்லாப் பழியையும் சுமத்துவதற்குத்தான் புலிகள் இருக்கிறார்களே. அதனால் அரசியல் படுகொலைகள், கடத்தல்கள் என வெள்ளைவான் கலாசாரம் கொடிகட்டிப் பறந்தது. 'அரசை எதிர்த்தால் நம் கதி அதோகதிதான்' என்ற பயத்திலேயே பலர் நாட்டைவிட்டுத் தப்பியோடினர். இன்னும் பலர் கடத்தப்பட்டு, அப்படி நாட்டை விட்டுத் தப்பியோடிவிட்டனர் என மக்களுக்கு கதைகள் அவிழ்த்து விடப்பட்டன அல்லது அவர்களையும் புலிகள் கடத்திவிட்டனர் என்று சொல்லி வாயை அடக்க முடிந்தது.

ஆனால் இப்போது புலிகள் இல்லாததால் ராஜபக்சக்கள் பாடு திண்டாட்டமாக இருக்கிறது. தமது அரசியல் எதிரிகளுக்கோ அல்லது நீதி கேட்பவர்களுக்கோ ஒரு சிறு உரசல் காயம் ஏற்பட்டால் கூட அதற்கு அரசே காரணம் என்று எல்லோரும் கண்ணை மூடிக் கொண்டு சுட்டுவிரலை நீட்டத் தொடங்கியுள்ளார்கள். போகப்போக அது பல்கிப் பெருகி அரசு மீதான அதிருப்தி அலையை மிகப்பெரிதாக எழச்செய்துவிடும் என்ற பயம் ராஜபக்சக்களிடம் தொற்றத் தொடங்கியுள்ளது.

எனவேதான் மீண்டும் புலிகளுக்கு உயிரூட்டி, நாட்டில் நிகழும் படுபாதகமான சம்பவங்களைப் பழையபடி அவர்கள் மீது சுமத்த ஏற்பாடுகள் நடக்கத் தொடங்கியுள்ளன. அந்த நாடகத்தின் ஓர் அங்கமே அண்மையில் பளையில் வெடிபொருள்களுடன் கணவன்,மனைவி உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்ட விவகாரம். அவர்கள் கிளைமோர் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டனர் எனவும் அவர்களிடமிருந்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன எனவும் படைத்தரப்பு சொல்கின்றது. ஆனால் ஒரு பழைய துருப்பிடித்த தோட்டா கண்டெடுக்கப்பட்டாலே அதைப் புகைப்படம் எடுத்து, 'புலிகளின் ஆயுதம் மீட்பு' என்று ஆகாயத்துக்கும் பூமிக்கும் குதிக்கும் அரசு, இப்படி தாக்குதல் ஒன்றுக்காகத் திட்டமிட்டு கிளைமோரை கடத்திச் சென்றவர்களைக் கைது செய்த பின்னரும் கூட அந்தக் கிளைமோரையோ, அது தொடர்பில் பின்னதாக மீட்கப்பட்டதாகச் சொல்லப்படும் வெடிபொருள்களையோ ஏன் இன்னமும் வெளிப்படுத்தவில்லை? கிளைமோர் தாக்குதலை அவர்கள் நடத்துவதாயின் இராணுவத்தினர் அதிகமுள்ள தங்கள் சொந்த இடத்தில் நடத்தாமல், எதற்காக இங்கிருந்து கண்டிக்கு கொண்டு செல்ல முற்படவேண்டும்? பொய்யைச் சொல்வதென்றால் கூட பொருந்தச் சொல்லவேண்டுமல்லவா?.

புலிகள் தங்கள் ஆயுதங்களை மௌனிக்கின்றோம் என அறிவித்த பின்னர், இப்போது கணவன், மனைவி இருவர் கிளைமோர் வைத்து புலிகளுக்கு உயிரூட்ட நினைப்பதென்பதை எவர் நம்புவார்? அப்பன், கோபி போன்ற இளைஞர்கள் அப்படிச் செய்ய முயன்றார்கள் என்பதைக் கூட ஓரளவு நம்பலாம். ஆனால் இப்படி ஏழு வயதுக் குழந்தையுடன் வாழும் தம்பதியர் பயங்கரமான தாக்குதல் ஒன்றை நடத்த முனைந்தனர் என்பதைக் கிளைமோர் கூட நம்பாதே. ஆனால் அப்படி நம்ப வைக்க வேண்டிய தேவை ராஜபக்சக்களுக்கு எழுந்துள்ளது.

ஏற்கனவே சொல்லப்பட்டது போன்று, தாம் செய்யும் அத்தனை பஞ்சமா பாதகங்களின் பழியையும் போட புலிகள் இயங்குநிலையில் இருக்கின்றார்கள் என அரசு காட்டவேண்டியுள்ளது. அத்துடன் பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் புலிகள் மீதான தடையை உத்தியோகபூர்வமாக நீக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

அப்படி சர்வதேச ரீதியில் புலிகள் மீதான தடை நீங்கப்பெற்றால், அது இலங்கை அரசுக்கு இராஜ தந்திர ரீதியாக பெரும் பின்னடைவாக போய்விடும். ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்ததாலேயே புலிகள் மீதான தடையை சர்வதேச நாடுகள் நீக்கின என்ற கருத்தியலை சிங்கள மக்களிடம் எதிர்க்கட்சிகள் பரப்பினால், அவ்வளவுதான். அடுத்தமுறை ராஜபக்சக்கள் ஆட்சிக் கதிரையை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. எனவே இந்தன் இரு ஆதாயங்களும் அரசுக்கு கிடைக்கவேண்டுமானால், அப்பாவிகளைப் பலிகொடுத்தேனும் புலிகள் இன்னும் இலங்கையில் இருப்பதாகக் காட்டவேண்டும்.

அதற்கான நாடகங்கள் தான் இப்போது அரங்கேறத் தொடங்கியுள்ளன. அப்பாவிகளின் தோளில் பழிகளைச் சுமத்தி தங்கள் அதிகாரத்தை தக்க வைப்பது ராஜபக்சக்களுக்கு புதிதில்லைத் தானே.

### தெற்காசியாவின் மிகப்பெரிய

# சிறுநீரக மருத்துவமனை விரைவில் திறக்கப்படும்

கொழும்பு, டிசெ. 5

**இலங்கை – சீனா நட்பு தேசிய சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவமனை விரைவில் பொதுமக்களுக்காக திறக்கப்பட உள்ளது.**

பொலநறுவையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை சிறுநீரகவியல் மருத்துவ சிகிச்சைக்காக தெற்காசியாவில் காணப்படும் மிகப்பெரிய சிறப்பு மருதுவமனையாக அமைய வுள்ளது. பொலநறுவை பொது மருத்துவமனைக்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ள இந்த தேசிய சிறு நீரகவியல் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் 2018ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மருத்துவமனையில் 204 நோயாளர் விடுதிகள் உள்ளன. இதில் 100 சிறுநீர் பிரிப்பு இயந்திரங்கள், சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நவீன சத்திரசிகிச்சைக் கூடங்கள், சமீபத்திய ஆய்வகங்கள் மற்றும் பிற நவீன தொழில்நுட்பங்கள் உள்ளன.

(ம)

## ஆபத்தான மரத்தை அகற்றித் தாருங்கள்!

### வர்த்தகர்கள் கோரிக்கை

கிளிநொச்சி.டிசெ.5

தருமபுரம் சந்தைப்பகுதியில் மரம் ஒன்று கிளைகள் முறிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. அந்த மரத்தின் கிளைகளை வெட்டி அகற்ற உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை புரேவி புயல் காரணமாக சந்தை உட்புறத்தில் நின்ற சில மரங்கள் கரைச்சி பிரதேச சபையினரால் அகற்றப்பட்டன.

இந் நிலையில் குறித்த மரத்தையும் அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அதை அகற்றாது பிரதேச சபையினர் சென்றுள்ளனர் என்று வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதன் காரணமாக மிகவும் அச்சத்துடன் சந்தை வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றோம் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-113)

## தண்டம்

சாவகச்சேரி, டிசெ. 5

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 11 பேருக்கு 2 லட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாவும் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு ஒரு லட்சம் ரூபாவும் கசிப்பு உடைமையில் வைத்திருந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபாவும் உட்பட 4 லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் தண்டமாக விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் எவையுமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 77 ஆயிரத்து 500ரூபாவும், மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய எட்டுப் பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டன. (ஒ,9)

# திருப்தியடையக் கூடியவாறே நாட்டின் பாதுகாப்பு உள்ளது!

### விமல் சான்றிதழ்

கொழும்பு, டிசெ. 5

நாட்டின் பாதுகாப்பு திருப்தியடையக்கூடிய நிலையிலேயே உள்ளது. இனவாத, மதவாத கொள்கையில் இந்த நாட்டில் அநீதிகளை நடத்த நாம் அனுமதிக்க மாட்டோம் என அமைச்சர் விமல் வீரவன்ச நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் ஜனநாயகமும் மனித உரிமைகளும் இருக்காது என்பதை சர்வதேசத்துக்கு கொண்டு சேர்க்கவே சுவிஸ் தூதரக நாடகம் அரங்கேற்றப்பட்டது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்க 69 இலட்சம் மக்கள் வாக்களித்தமையானது இந்த நாட்டின் பாதுகாப்பை அவர் உறுதிப்படுத்துவார் என்ற எண்ணத்திலேயே. இன்று நாட்டின் தேசிய பாதுகாப்பு திருப்தியடையக் கூடிய நிலையிலேயே உள்ளது. இப்போது சிறைச்சாலைக்குள் ஏற்பட்டுள்ள கலவரமும் திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகும். இது அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சி என்பது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெலிக்கடை சிறைச்சாலையிலும் இவ்வாறான திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது புலனாய்வுத்துறை அதனைக் கண்டறிந்து கலவரம் நடக்கவிருந்ததைத் தடுத்து நிறுத்தியது சிறைக்குள் உள்ளவர்களே ஒருவருக்கு ஒருவர் அடித்துக்கொள்கின்றனர்.



அதற்கு மனநோய்க்காக பயன்படுத்தப்படும் மருந்துகளை கைதிகள் பயன்படுத்திக் கொண்டமையே காரணமாகும். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சகல நடவடிக்கைகளும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். இனவாத, மதவாத கொள்கையில் இந்த நாட்டில் அநீதிகளை நடந்த நாம் அனுமதிக்க மாட்டோம் - என்றார். (ம-44)

# நாடாளுமன்றத்துக்கு வருமாறு பசிலுக்கு கோத்தா அழைப்பு!

கொழும்பு, டிசெ. 5

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்குமாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பசில் ராஜபக்சவின் நாடாளுமன்ற பிரவேசம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கமைய, கடந்த சில நாள்களுக்குமுன்னரும் பசில் ராஜபக்சவிடம் தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தேன் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார் எனினும், தனக்கு விரைவில் நாடாளுமன்றம் வருவதற்கான எண்ணம் கிடையாது என பசில் ராஜபக்ச குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இதன்போது கூறியுள்ளார். பசில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்கு வருகை தர வேண்டும் என வலியுறுத்தி தயாரிக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-22)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்!



வவுனியா, டிசெ. 5

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு முதல் கட்டமாக உலர் உணவுப் பொதிகள் தமிழ் விருட்சம் அமைப்பானால் வழங்கப்பட்டது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்த பத்துக் குடும்பங்கள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் தமிழ் விருட்சம் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமாரால் நேற்று வழங்கப்பட்டது. (ம-இ)

## விளக்கமறியல்

சாவகச்சேரி, டிசெ. 5

கைக்குண்டு மற்றும் ஹெரோய்ன் வைத்திருந்த சந்தேகத்தில் கைதான இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மண்டுவில் அம்மன்கோவிலடிப் பகுதியில் வீதியில் ஒன்றுகூடி நின்றவர்கள் ரோந்து சென்ற சாவகச்சேரி பொலிஸாரைக் கண்டு ஓடியதால் துரத்திப் பிடித்து சோதனையிட்டபோது அவர்களிடம் கைக்குண்டு மற்றும் போதைப்பொருள் ஆகியன இருந்தன எனத் தெரிவித்து இருவரை கைது செய்தனர்.

இருவரையும் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ,9)

*மஹர சிறைக் கலவரம்:*

# மருந்தை தொடர்புபடுத்திவரும் தகவல்கள் அடிப்படையற்றவை!

*உளநல மருத்துவ கல்லூரி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 5

மஹர சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களுடன் உளநல மருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்படும் மருந்து ஒன்றைத் தொடர்புபடுத்தி ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் அடிப்படைகளற்றவை என இலங்கை உளநல மருத்துவக் கல்லூரி சுட்டிக்காட்டியுள்ளது. வன்முறை தூண்டப்படுவதற்கும் மிகமோசமான நடத்தைக்கும் குறித்த மருந்து காரணமாக அமையாது என்றும் இலங்கை உளநல மருத்துவக் கல்லூரி தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரங்களுடன் உளநல மருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்படும் மருந்து ஒன்றைத் தொடர்புபடுத்தி ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகியிருந்தன. இவை துரதிஷ்டவசமாக எவ்வித அடிப்படைகளுமின்றி வெளியிடப்பட்ட செய்திகள் என்பதுடன், உண்மையில் பயனடையும் நோக்கில் இந்த மருந்தைப் பயன்படுத்தும் பல்லாயிரம் பேருக்கு இச் செய்திகளால் ஏற்பட்டிருக்கக்கூடிய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கிறது. இலங்கையில் உளநல மருத்துவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் குறித்த மருந்து, உலகளாவிய ரீதியில் பலராலும் உபயோகிக்கப்படுகின்றது என்பதுடன் அது உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறது. எமது நாட்டில் கடந்த ஏழு தசாப்த காலமாக உளநல மருத்துவர்கள் இந்த மருந்தைப் பயன்படுத்தி வருவதுடன் அது நோயாளர்களுக்குப் பெரிதும் பயனளித்திருக்கிறது. அதுமாத்திரமன்றி உரிய தராதரங்களுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் பிரகாரமே மருத்துவர்கள் இம் மருந்தைப் பரிந்துரை செய்கின்றனர். எனவே வன்முறை தூண்டப்படுவதற்கும் மிகமோசமான நடத்தைக்கும் குறித்த மருந்து காரணமாக அமையாது என்பதுடன் அது அமைதியையே ஊக்குவிக்கும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-இ)



## வெள்ளத்தால் பாதித்தோருக்கு உதவிகள்

சாவகச்சேரி,டிசெ.5

தென்மராட்சி பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் முதற்கட்டமாக 250 நில விரிப்புகளும், கூரை விரிப்புகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை இடைத்தங்கல் முகாம்களில் உள்ள குடும்பங்கள் மற்றும் சிறு குழந்தைகள், முதியோர்கள் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

கட்டம் கட்டமாக மாவட்டச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்படும் இவ் உதவிகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுமென பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டது. (ஐ -9)

# நந்திக்கடலின் மேலதிக நீர் கடலுக்குள் வெட்டப்பட்டது!

முல்லைத்தீவு, டிசெ. 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை பெய்த கனமழையின் காரணமாக வட்டுவாகல் நந்திக் கடல் நிரம்பிய நிலையில், மேலதிக நீர் கடலுக்குள் வெட்டப்பட்டது.

மேலதிக நீரை கடலுக்குள் வெட்டிவிடும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை பாரம்பரியமாக முன்னெடுக்கப்படும் விசேட பூசை வழிபாடுகளுடன் நீர் வெட்டிவிடப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார், கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் திருமதி உமாமகள் மணிவண்ணன், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமாசம், சம்மேளனம்



என்பவற்றின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-246)

## தென்மராட்சியில் 198பேர் இடைத்தங்கள் முகாமில்!

சாவகச்சேரி, டிசெ. 5

புரேவி புயல் மற்றும் தொடர் மழையால் தென்மராட்சி பிரதேசத்தில் 198 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

54 குடும்பங்களைச் சேர்ந்த 198 பேரே இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அந்தந்தக் கிராம அலுவலர்களால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோயிற்குடியிருப்பு பிரிவில் சக்தியம்மன் வித்தியாலயம், உதயசூரியன் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் மற்றும் போக்கட்டி பாடசாலை ஆகிய தற்காலிக முகாம்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ம-9)

# புயலால் பாதிக்கப்பட்டோருக்கு முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா

## வவு.மாவட்ட மேலதிக செயலர் தெரிவிப்பு



வவுனியா, டிசெ.5

வவுனியாவில் புரேவி புயலால் பகுதியளவில் பாதிப்படைந்த வீடுகளுக்கு முதல் கட்டமாக 10 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட மேலதிக செயலர் தி.தினேஸ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; கடந்த புதன்கிழமை இரவு புரேவி புயல் அனர்த்தத்தால் வவுனியா மாவட்டத்தில் சிறு சிறு பாதிப்புக்கள் ஏற்பட்டபோதும் பெரியளவிலான பாதிப்புக்கள் எவையும் ஏற்பட வில்லை.

இருந்த போதிலும், வவுனியா பிரதேச செயலக பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், 15 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந் துள்ளன.

வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்படைந்துள ளதுடன் 3 வீடுகளும் பகுதியள வில் சேதமடைந்துள்ளன.

மேலும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், 35 வீடு களும் பகுதியளவில் சேதமடைந் துள்ளன. வவுனியா வடக்கு பிர தேச செயலக பிரிவில் 84 குடும் பங்களைச் சேர்ந்த 255 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 4 வீடுக ளும் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு சேதமடைந்த வீடுக ளுக்கு முதல் கட்டமாக 10 ஆயிரம் ரூபா அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. (ஐ-18)



## கமநல அலுவலகத்தில் நேற்று தொற்று நீக்கம்

வவுனியா, டிசெ.5

வவுனியா கமநல அபி விருத்தி திணைக்கள பிரதான அலுவலகத் தில் தொற்று நீக்கம் செய்யும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்க ப்பட்டன.

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உத விப் பணிப்பாளர் இந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற திணை களத்தின் உயர்மட்ட கலந்துரையாடலுக்கு சென்றிருந்தார். கலந்து ரையாடலில் கலந்து கொண்ட கமநல அபிவி ருத்தி திணைக்கள உயர் அதிகாரி ஒருவ ருக்கு கொரோ னாத் தொற்று நேற்றுமுன்தி னம் உறுதிசெய் யப்பட்டது.

இதன் காரணமாக வவு னியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக் கள உதவிப் பணிப்பா ளர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதுடன், அவரது பிரதான காரியாலய மான கமநல அபிவி ருத்தி திணைக்கள அலு வலகம் நகரசபையால் தொற்று நீக்கம் செய் யப்பட்டது. (ஐ-18)

## தென்மராட்சியில் 6,683 பேர் பாதிப்பு

சாவகச்சேரி,டிசெ.5

புரேவி புயல் மற்றும் மழை வெள்ளம் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுக் காலை வரை ஆயிரத்து 951 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 683 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இரு குடியிருப்புகள் முழுமையா கச் சேதமடைந்ததுடன் 591 வீடுகள் பகுதியள வில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-9)



புரேவி புயல் காரணமாக பருத்தித்துறை வியா பாரி மூலை வீரபத்திரர் ஆலயத்துக்கு அருகில் நின்ற தென்னை மரம் வேருடன் சாய்ந்து வீழ்ந் துள்ளது. இதனால் ஆலயத்தின் ஒரு பகுதி சேத மடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## புயலால் பாதித்தோருக்கு அவசர உதவிகள்

மன்னார், டிசெ.5

மன்னார் மாவட்டத்தில் 'புரேவி' தாக்கத்தால் பாதிக் கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்களுக்கு மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம்(மெசிடோ) நேற்றுமுன் தினம் அவசர உதவிகளை வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்ட பதில் செயலர் எஸ்.குணபாலன் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பள்ளிமுனை, சித்திவிநாயகர், எழுத்தூர் பாடசாலை களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் நலன் கருதி பிஸ்கட்,பால்மா,குழந்தைகளுக்கான பால்மா பக்கெட் போன்றவை வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-56, 60)



# சாராவை அழைத்துவருவதற்கு ஏன் இன்னும் நடவடிக்கையில்லை

முஜிபுர் கடும்பிடி

கொழும்பு, டிசெ. 5

ஈஸ்டர் தாக்குதல் குண்டுதாரிகளில் உயிரோடு இருக்கும் சாராவை இந்தியாவில் இருந்து அழைத்து வர அரசாங்கம் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருக்கின் றது. அத்துடன் ஏப்ரல் தாக்குதலை காரணம் காட்டி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு இதுவரை குற்ற வாளிகளை கைதுசெய்ய முடியா மல் போயுள்ளது ஏன்? என முஜி புர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரி வித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை இடம்பெற்றுக்கொண் டிருக்கின்றது. இந்தத் தாக்குத லுக்கு யார் பொறுப்பு கூற வேண் டும் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது. அண்மையில் விசாரணைக்குழு வுக்கு சாட்சியமளிக்க வந்த குற்றப் புலனாய்வு பிரிவு முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி சென விரத்ன, சஹ்ரானுக்கு மேலாக ஒருவர் இருக்கின்றார். அது யார் என்பதை கண்டுபிடிக்க நடவ டிக்கை எடுத்தபோதும் தனது பதவிக் காலம் முடிவடைந்ததால் கண்டுபிடிக்க முடியாமல் போனது என குறிப்பிட்டுள்ளார். அந்த நபர் யார் என்பது புலனாய்வு பிரிவு உட் பட அரசாங்கத்தில் அதிகமானவர் களுக்குத் தெரியும். ஆனால் ஒரு வருடமாகியும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இதுவரை யாரையும் கைதுசெய்யவில்லை. அதே போன்று கடந்த காலங்களில் எமது அரசாங்கத்தில் இருந்த பல அமைச்சர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தினார்கள். ஆனால் எதனை யும் ஒப்புவிக்கவில்லை. அதே போன்று இந்த தாக்குதலால் முஸ் லிம் மக்களே அதிகம் பாதிக்கப்பட் டனர். அதனால் விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளை கண்டுபிடிப்பதன் மூலமே முஸ் லிம்களுக்கு நியாயம் கிடைக்கும்.

மேலும் ஈஸ்டர் தாக்குதல் குண்டு தாரிகளில் உயிரோடு இருப்பது சாரா என்ற பெண் மாத்திரமாகும். அவர் இந்தியாவுக்கு தப்பிச்சென் றது உறுதியாகி இருக்கின்றது. உண்மையாகவே விசாரணை நடத்துவதாக இருந்தால் சாராவை இந்தியாவில் இருந்து அழைத்து வர நடவடிக்கை எடுத்திருக்கவேண் டும். ஆனால் அரசால் அதைச் செய்யமுடியவில்லை - என்றார். (ம-22)

## 89 ஆசிரியர்களுக்கு வன்னிக்கு இடமாற்றம்

சாவகச்சேரி,டிசெ.5

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவக வலயம் தவிர்ந்த ஏனைய நான்கு கல்வி வலயங்களில் கடமை யாற்றும் 89 ஆசிரியர்கள், வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு மாகாணகல்வி திணைக்க ளத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றலுக்கான மேன்முறையீடு செய்ய விரும் பும் ஆசிரியர்கள் தமது பகுதி கோட்டக் கல்வி அலுவலர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாள ரின் விதப்புரையுடன் எதிர்வரும் 17 ஆம் திக திக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை வருடாந்த இடமாற்றம் கோரி விண் ணப்பித்த 494 ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுள்ளன. இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ -9)

# புரேவியால் முல்லையில் 601 குடும்பங்கள் பாதிப்பு

- **37 வீடுகள் சேதம்**
- **இடைத்தங்கல் முகாமில் 282 பேர்**
- **75 குளங்கள் வான் பாய்வு**



**முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணி வரையான தகவல்களின் அடிப்படையில், 601 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 796 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.**

மேலும் தெரிவிக்கையில்,
துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 533 பேரும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 181 குடும்பங்களைச் சேர்ந்த 619 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 143 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 384 பேரும், மணலாறு பிரதேச செயலாளர் பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 97 பேருமாக மொத்தம் 601 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 796 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு விசுவமடு மேற்கு பகுதியில் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் மாவட்டத்தில் 36 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மாவட்டத்தின் சிறிய நடுத்தர அளவிலான 75 குளங்கள் வான் பாய்கின்றன. குறிப்பாக குறித்த நீரானது வனப்பகுதிகளுக்கூடாக அதிகளவில் சென்று கிளிநொச்சி மாவட்டத்துக்குள் செல்கின்றமையால் வான் பாய்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் சற்று குறைவாகவே காணப்படுகிறன. முல்லைத்தீவு கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் கடற்கரைக்கு மிக அண்மையாக இருந்தவர்கள் நான்கு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இதில் இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் இன்று (நேற்று முன்தினம்) மாலை மூடப்பட்டுள்ளன. ஒரு இடைத்தங்கல் முகாமில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் தங்கியுள்ளனர். மற்றைய இடைத்தங்கல்முகாமில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 282 பேர் தங்கியுள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (ந-19)

## மரண அறிவித்தல்

மண்ணில் 30 . 12 . 1940



விண்ணில் 02 . 12 . 2020

**T.S. நடராசன்**

நயினாதீவு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட. சுப்பிரமணியம் நடராசன் அவர்கள் (02.12.2020) புதன்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலம்சென்ற சுப்பிரமணியம் (அனலை) கண்மணி அவர்களின் அன்பு மகனும். காலம்சென்ற சின்னத்தம்பி சவுந்தரம் ஆகியோரின் அருமை மருமகனும். 10.11.2020 அன்று காலஞ்சென்ற கிருஷ்னவேணி அவர்களின் ஆசைக் கணவரும். கனடாவில் வசிக்கும் மலர்விழி. கயல்விழி. நீலவண்ணன். அமரர் மணிவண்ணன். கமலவண்ணன். அருள்விழி (சுவிஸ்). மணிவிழி. கலைவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும். தர்மலிங்கம். சுதாகரன். நாகராஜேஸ்வரி. ஜெசிதா. ஹேமலதா. சங்கர்(சுவிஸ்). மயூரன். தனலட்சுமி. ஆகியோரின் அன்பு மாமனாரும். தனபாலசுந்தரம். மாசிலாமணி. சாரதாம்பாள். புவனேஸ்வரன் (கனடா). பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும். பத்மாசனி. சிவரஞ்சினி. புவனேஸ்வரி. ராஜேஸ்வரி. விஜயமங்களம். பரமேஸ்வரி. ஹீநிவாசமூர்த்தி. ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். சகானா. ஜெனார்த்தன். சுகன்யா. கிருசாந். அபிதா. நிருஷன். கிருஷ்ரிகா. ஜெனனி. ஜெனனன். ஆரணி. ஆரூரன். சௌமியா. சாஜீதன். நிசாந். ரவிசாந். நிந்துஜா. அஸ்வின். பிரவீன். அல்வின் ஆகியோரின் அருமை தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.12.2020 திங்களன்று கனடாவில் நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு.**
Neelavannan – (416) 844 – 3018
Kamalavannan – (416) 995 – 2059
Kalaivannan – (647) 607 – 7753
Puvaneswaran (Canada) – (647) 768- 2714
Malarvily – (416) 299 – 6490
Kayilviliy – (905) 472 – 2494
Arulviliy (Swiss) – (416) 477 – 9061
Manivily – (416) 272 – 8190
Jesitha – (416) 566 – 0337
Thanabalasundaram (Jaffna) – 0212227472 / 0776169666
Masilamany (Jaffna) – 0212228581 / 0774460155
Parameswaran (Jaffna) – 0212220877 / 0766574850

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## இரட்சணியசேனை நிலையத்தால் கொடிகாமத்தில் உணவுப்பொருள்கள்

கொடிகாமம், டிசெ.5
கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம அலுவலர் பிரிவில் புரேவி புயல் மற்றும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரட்சணிய சேனை நிலையத்தால் உணவும் தண்ணீரும் வழங்கப்பட்டன.
கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் செட்டியாவெளி, சுரட்டிக்குளம் மற்றும் நாவலடி பகுதியில் வசிக்கும் 40 குடும்பங்களைச் சேர்ந்த 120 அங்கத்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் உடனடி உணவு வழங்கப்பட்டது.
இதேவேளை நிலைமை சீராகும் வரை தொடர்ந்து அவர்களுக்கான உடனடி உணவுகள் மற்றும் தண்ணீர் என்பன வழங்கப்படவுள்ளன என நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-159)

## கரடிக்குன்று பகுதியில் 13 குடும்பங்கள் பாதிப்பு

பூநகரி, டிசெ.5
புரேவி புயலால் ஏற்பட்ட கன மழையால் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட நாச்சிக்குடா கரடிக்குன்று பகுதியில் 13 குடும்பங்கள் வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.
வருடா வருடம் தாங்கள் வெள்ளப்பாதிப்பை எதிர்கொள்கின்றோம் எனத் தெரிவித்த மக்கள் தமக்கு இதுவரை யாரும் உதவ முன்வர வில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (வ-6)




## புரேவி புயலால் வவுனியாவில் 424 பேர் பாதிப்பு; 57 வீடுகள் சேதம்

வவுனியா, டிசெ.5
வவுனியா மாவட்டத்தில் புரேவி புயல் தாக்கம் மற்றும் கனமழை காரணமாக 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 57 வீடுகளும், 3 சிறுகைத்தொழிற்சாலை நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
அதன்படி, வவுனியா பிரதேச செயலக பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளனர். 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்படைந்துள்ளனர். 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பாதிப்படைந்துள்ளனர். 35 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 35 குடும்பங்களும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 84 குடும்பங்களைச் சேர்ந்த 255 பேர் பாதிப்படைந்துள்ளனர். 4 வீடுகளும், 3 சிறுகைத்தொழிற்சாலைகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
பாதிக்கப்பட்டவர்களில் தாழ்நிலம் மற்றும் தற்காலிக வீடுகளில் வசித்த 81 குடும்பங்களைச் சேர்ந்த 244 பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் முற்பாதுகாப்பு நடவடிக்கையாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (வ-18)

## திரைப்பட கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.5
ஈழத் திரைக் கல்லூரியால் ஓராண்டு கால இலவச திரைப்படக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்வுள்ளது.
இதற்கான நுழைவுப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுக்கான விண்ணப்பப் படிவம் https://eelamfi.org/ என்ற அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
13 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள யாரும் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# கூட்டுறவுக்கு இலக்கணமான அமரர் பெரியார் வீரசிங்கம்!



**தர்மராஜா ரமேஸ்குமார்**
பதில் செயலாளர்
யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை

இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு எண்ணங்கள், கருத்துக்கள், சிந்தனைகள் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். பொதுவாக ஒருவனின் எண்ணம், சிந்த னைக் கருத்தை அப்படியே ஒத்த இன்னொரு மனிதன் இருப்பது இல்லை என்றே சொல்லலாம். இத்தகைய இவர்கள் பேசும் மொழிக்காக, பின்பற்றும் கோட்பாட்டுக்காக, கருத்துக்காக மொத்தத்தில் மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக உழைத்த உத்தமர்கள் என போற்றப்படுகிறார்கள். இத்தகைய மக்கள் மனதில் நிலைத்துவிட்ட சிலரில் ஒருவராக காணப்படுபவர் பெரியார் வீரசிங்கம்.

அவர் ஆற்றிய சமூகப் பணிகளில் குறிப்பாக கூட்டுறவுப் பணியை இங்கு குறிப்பிடலாம். கூட்டுறவு ஒரு மக்கள் இயக்கம், அது ஒரு சமயம் என்ற உணர்வு அவரது உடம்பிலேயே ஊறியிருந்தது. அது மட்டுமன்றி கூட்டுறவு இயக்கத்துக்கு முரணான ஏதாவது சக்தி தோன்றுமானால் அவர் பொறுக்கமாட்டார். வீரசிங்கமாக முழங்குவார்.

பெயருக்கு பொருத்தமாக வீரசிங்கமாக வாழ்ந்த பெரியாரின் சொல்லும் செயலும் வீரம்மிக்கதாகவே காணப்பட்டது. கூட்டுறவு ஒரு புனித இயக்கம் என்பதை மனதாரப் புரிந்துகொண்டு புனிதமாக கூட்டுறவை நெறிப்படுத்தினார்.

சிறந்த தலைமைத்துவம் ஒன்றால் கூட்டுறவை சிறப்பாக, புனிதமாக, மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக வழி நடத்த முடியும் என்பதை செயலில் காட்டியவர். உண்மை, நேர்மை, விடாமுயற்சி, கூட்டுறவு பற்றிய அறிவு, மனித மனங்களை வெல்லும் பண்பு, தீர்க்கதரிசனம், சிறந்த தீர்மானம் எடுக்கும் ஆற்றல், புதிய விடயங்களை சாதிக்க வேண்டும் என்பதில் உள்ள ஆர்வம், உயர்ந்த கல்வியறிவு, ஆழ்ந்த புலமை, சமூகப்பற்று இவை போன்ற தலைமைத்துவப் பண்புகளை ஏராளமாக தன்னகத்தே கொண்டிருந்தமையால் சிறந்த தலைவராக திகழ்ந்தார்.

இவரது தலைமைத்துவத்தின் கீழ் உருவான கூட்டுறவு நிறுவனங்களாக மலையாளம் புகையிலை கூட்டுறவுச்சங்கம், யாழ் மாவட்ட கூட்டுறவு வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை போன்ற அமைப்புக்களைக் குறிப்பிடலாம். அத்துடன் கூட்டுறவுக் கல்விக்கென கூட்டுறவுக் கல்லூரியை அமைத்ததோடு கூட்டுறவுக் கல்லூரியின் வளர்ச்சிக்காக 'ஐக்கிய தீபம்' தமிழ் பத்திரிகை, 'கூட்டுறவாளர்' என்னும் ஆங்கிலப் பத்திரிகைகளை வெளியிட அயராது உழைத்தார்.

### தேசிய ரீதியிலான செயற்பாடுகள்

வடபகுதியுடன் கிழக்கு மாகாண கூட்டுறவாளர்களையும் இணைத்து கூட்டுறவுத் துறைக்கு பணியாற்றிய பெரியார் தன் சேவையை தேசிய மட்டத்துக்கு விரிவுபடுத்தினார். 1955இல் அமைக்கப்பட்ட இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தின் தோற்றத்திற்கு அயராது உழைத்ததோடு பேரினவாத உள்ளங்களை வென்றமையால் தமிழனாக இருந்தும் கூட்டுறவுச் சம்மேளனத்தின் முதலாவது தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

கூட்டுறவுப் பணியுடன் பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றிய பெரியார் 1952இல் வட்டுக்கோட்டை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவரது சமூக கூட்டுறவுச் சேவையைக் கௌரவித்த பிரித்தானிய அரசு பிரித்தானிய ராஜ அங்கத்தவர் என்ற பட்டத்தையும் சமாதான நீதவான் என்ற பட்டத்தையும் வழங்கியது.

கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள், அபிவிருத்தி என்பன பற்றி ஆராய நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவுக்குத் தலைமை தாங்கி செயல்பட்டு கூட்டுறவு தொடர்பான விடயங்களை நாடாளுமன்றம் வரை முன்னெடுத்து தீர்வுகளையும் கண்டு கூட்டுறவு இயக்கத்தை செவ்வனே வழி நடத்தினார்.

வடபகுதி கூட்டுறவு அமைப்புக்களின் செயல்பாடுகளை சீரமைக்க பொருத்தமான அமைப்பாக வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையை அமைத்த பெரியார் அதனூடாக வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளை நிறைவேற்ற பல பணிகளை ஆற்றினார்.

கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கும், தீர்வு கண்டுகொள்வதற்கும் ஆண்டுதோறும் கூட்டுறவாளர் மாநாடுகளைக் கூட்டினார். எந்தப் பிரச்சினைகளையும் எவர் முன்னிலையிலும் எவ்விடத்திலும் எதுவித தயக்கமுமின்றி எடுத்துக் கூறவும் சரியானதும் நியாயமானதும் எனக் காணப்படும் விடயங்களைக் கண்டுகொள்ளவும், அதனை செயல்படுத்தவும் துணிவுடன் செயலாற்றினார்.

கூட்டுறவுக்கு இவர் ஆற்றிய பணியின் சிறப்பிலேயே வடபகுதி கூட்டுறவு இயக்கம் தனக்கென ஒரு சிறப்பைப் பெற்று முத்திரை பதித்தது எனலாம். கூட்டுறவுத்துறை எந்தச் சபையினது கைகளிலும் அடிமைப்படாது சுதந்திரமான அமைப்பாக மிளிர வேண்டுமென்பதில் ஆர்வமுடையவராக செயற்பட்டார். கூட்டுறவின் வளர்ச்சிக்கு சட்டதிட்டங்களை விட கூட்டுறவாளரின் உண்மையான முயற்சியே வெற்றியளிக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டு நிரூபித்துக் காட்டினார். பெரியார் அவர்களின் சிந்தனைகளை மனதில் நிறுத்தி கூட்டுறவை முன்னெடுத்துச் செல்வோமாக.

---

# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2வது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.

## மிதுனம்

மதிநுட்பம் மிகுந்தவர் நீங்கள். சனி பகவான் இப்போது 27.12.2020 முதல் 19.12.2023 வரை உள்ள கால கட்டங்களில் 8ம் வீட்டில் அமர்கிறார். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. குடும்ப விஷயங்களை வெளியில் சொல்ல வேண்டாம். நேரம் கெட்ட நேரத்தில் பயணிக்க வேண்டாம். யாரையும் முழுமையாக நம்பி ஏமாற வேண்டாம். வங்கிக் காசோலைகளைக் கவனமாகக் கையாளுங்கள். முக்கிய பத்திரங்களில் கையெழுத்திடும்போது சட்ட ஆலோசகரை கலந்து முடிவெடுக்கவும். மகளின் திருமணத்திற்காக கடன் வாங்க வேண்டி வரும்.

திடீர் பயணங்களும் அலைச்சலும் உண்டு. கர்ப்பிணிகள், மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மாத்திரையும் உட்கொள்ள வேண்டாம். மெடிக்ளைம் எடுத்துக் கொள்ளுங்கள். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 9ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், இக்கால கட்டத்தில் பிரச்சினைகள் விலகும்.

சனி பகவான் உங்கள் ராசிக்கு 2ம் வீட்டைப் பார்ப்பதால் சாதுர்யமாகப் பேசுவீர்கள். ஆனால் சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசி சிக்கிக்கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். சனி பகவான் உங்களின் 5ம் வீட்டைப் பார்ப்பதால் ஏதோ சதி நடப்பதாக சிலரைச் சந்தேகப்படுவீர்கள். பூர்வீகச் சொத்தில் பிரச்னைகள் வந்து சரியாகும். சனி பகவான் 10ம் வீட்டைப் பார்ப்பதால், வேற்று மொழி அன்பர்களால் ஆதாயமடைவீர்கள்.

### சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்

உங்களின் தைரிய ஸ்தானாதிபதியான சூரியனின் உத்தராடம் நட்சத்திரத்தில் 27.12. 2020 முதல் 27.12.2021 வரை சனிபகவான் செல்வதால் இக் காலகட்டத்தில் உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். பணம் வரும். சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09. 2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால், இக்காலகட்டத்தில் இளைய சகோதர வகையில் மனத்தாங்கல் மற்றும் வீண் செலவுகள் வந்து நீங்கும்.

உங்களின் தனாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனிபகவான் செல்வதால், ஷேர் மூலம் பணம் வரும். உங்களிடம் பணம் பெற்று ஏமாற்றியவர்கள், இப்போது திருப்பித் தருவார்கள். திருமணம், சீமந்தம் என வீடு களைகட்டும். இதற்கிடையில் 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனிபகவான் வக்ரத்தில் செல்வதால் அலைச்சல் அதிகரிக்கும். உடல் சோர்வு வந்து நீங்கும்.

உங்களின் ரோகலாபாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால் நிலம் வாங்கும் யோகம் உண்டு. 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி பகவான் வக்ரமடைவதால் திடீர் பயணங்கள் அதிகரிக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். உங்களை எதிர்த்துப் பேசியவர்கள் வலிய வந்து ஆதரித்துப் பேசுவார்கள்.

இல்லத்தரசிகளே! குடும்பத்தில் பெரிய முடிவெல்லாம் நீங்கள்தான் எடுக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உயர் கல்வி, திருமணம் குறித்து கவலைகள் தலைதூக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்குப் பேச்சில் கவனம் தேவை. சம்பளம் உயரும். வியாபாரிகள் ஆழம் தெரிந்து கால் வைக்க வேண்டும். போட்டிகள் அதிகரிக்கும். பழைய சரக்குகளைப் போராடி விற்பீர்கள்.

உத்தியோகஸ்தர்களே, நேரம் காலம் பார்க்காமல் உழைத்தும் எந்தப் பயனும் இல்லையே, என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள்.

**பரிகாரம்:** . தினமும் காகத்துக்கு அன்னமிட்டு வாருங்கள். உங்களின் பிரச்னைகள் நீங்கி, வாழ்வில் வெற்றி கிடைக்கும்.



## இன்றைய நாள்

**மேடம்:** எல்லாவற்றையும் சமா ளிப் பீர்கள். எதிர்பார்த்த தொகை கிடைக் கும். வேலைக்கு முயற்சித்த வர்க ளுக்கு நல்ல வேலை அமையும். கண வன், மனைவி இடையே மனக்கசப்பு வந்து போகும்.

**இடபம்:** காலையும், மாலையும் கல வையான பலன்கள் இருக்கும். பணி களை மன நிறைவுடன் செய்து முடிப் பீர்கள் கடனில் பெரும்பகுதியை அடைத்து நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்:** பணியில் மனக்குறைகள் இருந்தாலும் சலுகைகள் உண்டு. புதி தாக அறிமுகமாவர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பராமரிப்புச் செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

**கடகம்:** திட்டங்கள் எல்லாம் சரியான முறையில் கூடி வரும். திருமண விஷ யமாக உறவினர்களிடமிருந்து சுபச் செய்தி வரும். கணவன், மனைவி இடையே முன்பைவிட நெருக்கம் கூடும்.

**சிம்மம்:** பெண்களுக்கு தோழிகளால் சில சங்கடங்கள் வரலாம். அரசாங்க விஷ யங்கள் அலைச்சலுக்கு பிறகு நன்மை கள் உண்டு. வண்டி வகையில் திடீர் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல தக வல் வரலாம். சிக்கல் நீங்கும். நெருங் கிய நண்பர்களிடையே இருந்த மனஸ் தாபங்கள் நீங்கும். வளர்ச்சி அதி கரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** வியாபாரம் லாபகரமாக நடக்கும். புதிய மனிதர்கள் உதவுவர். குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்க ளுக்கு நற்செய்தி உண்டு.முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் பயம் நீங்கும்.

**விருச்சிகம்:** பணப்புழக்கம் இருக்கும். அடமான நகைகளை மீட்பீர்கள். மனதில் இருந்த பயங்கள் தீரும். பல நாட்கள் சந்திக்காத நண்பர்கள் தொடர்பு கொள்வார்கள்.

**தனுசு:** பிறரது குடும்ப விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. வாக்கு வாதம், வாக்குறுதி இரண்டும் இன் றைக்கு வேண்டாம்.நிலுவைப் பணி களை முடிப்பீர்கள்.

**மகரம்:** கடந்த இரண்டு நாளாக இருந்த வருத்தங்கள் குறையும். எதிர்பார்த்த வேலை ஒன்று முடிய அதிகம் செலவாகலாம். மகன்/மகளிடமிருந்து மனநிறைவளிக்கும் செய்தி வரும்.

**கும்பம்:** இனிமையான நாள். எதிர் பார்த்த சிறப்புகள் கைகூடும். பெண் கள் செய்த முயற்சிகள் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும்.

**மீனம்:** புதிய முயற்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் நன்மை உண்டு. குழந்தைகளால் ஏற்பட்ட கவலை தீரும். நிம்மதி வரும். வழக்குகளில் திசைதிருப்பம் ஏற்படும்.

# நிரம்பி வழியும் கண்டுவில் குளம் குடியிருப்புகளுக்குள் வெள்ளம்

சாவகச்சேரி, டிசெ.5

சாவகச்சேரி கண்டுவில் குளம் மழை வெள்ளத்தால் நிரம்பி வழிவ தால் அயலில் உள்ள குடியிருப்பு களுக்குள் வெள்ள நீர் புகுந்துள் ளது. இப் பகுதி கண்டுவில் 2ஆம் ஒழுங்கையில் இரண்டு அடி உய ரத்துக்கு வெள்ளம் தேங்கி நிற்கி றது.

இதனால் இந்த வீதியில் வசிக்கும் மக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர். குளத்தை அண்டிக் காணப் படும் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

முன்பு கண்டுவில் குளத்தில் மேல திகமாகக் காணப்படும் வெள்ள நீர், வாய்க்கால் வழியாகக் கற் குளி வயல் வாய்க்காலுக்குச் சென் றது.

தற்போது வாய்க்கால் அடைக்கப் பட்டிருப்பதால் வருடந்தோறும் பல குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தூர்வாரிக் காணப் படும் குளத்தை ஆழமாக்க விவ சாயத் திணைக்களத்தால். கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டது. நிதி போதாது எனக் கைவிட்டதால் நிதி வேறொரு குளப் புனரமைப்புக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ந-9)

# வெள்ளத்தில் மூழ்கிய கொடிகாமம் வீடுகள்

கொடிகாமம், டிசெ.5

புரேவி புயல் மற்றும் தொடர் மழை காரணமாக கொடி காமத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ள நிலைமை ஏற் பட்டுள்ளது.

இதன்படி கொடிகாமம், கொடிகாமம் மத்தி, தவசிகுளம், வெள்ளாம்போக்கட்டி, அல்லாரை உள்ளிட்ட கிராமங்க ளின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்பட் டுள்ளது. இதனால் தவசிகுளம் உள்ளிட்ட பகுதியில் வெள்ளம் காணப்படுகின்ற இடங்களில் வசிக்கும் குறிப் பிட்ட குடும்பங்கள் இடைத்தங்கல் நிலையங்களிலும், ஏனையோர் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ள னர். மக்களை வெளியேற்ற இராணுவம் உதவிபுரிந்தது. வெள்ளாம்போக்கட்டி மற்றும் அல்லாரை பகுதிகளில் வெள்ள நிலைமைக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்ட சில குடும்பங்கள் தத்தமது வீடுகளிலேயே வசித்து வருகின்ற னர். (ந)





# 210 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

மன்னார், டிசெ.5

புரேவி புயலால் பாதிக்கப்பட்ட 210 குடும் பங்களுக்கு மன்னார் மெசிடோ நிறுவ னத்தால் அவசர உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலனின் வேண்டுகோளில் சாந் திபுரம், எமில் நகர் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து பள்ளிமுனை சித்தி விநாயகர் பாடசாலை மற்றும் எமில்நகர் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங் களுக்கே இந்த உதவிகள் வழங் கப்பட்டுள்ளன. (வ-213)

# மடுவில் உடைக்கப்பட்ட 2 குளங்கள் புனரமைப்பு

மன்னார், டிசெ.5

வடக்கு கிழக்கை அச்சுறுத்திய புரேவிப் புயலால் மன்னார் மாவட் டத்தில் பெய்த காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாக, மடுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சின்னவலயன்கட்டு மற்றும் குறிஞ்சாக்குளம் ஆகிய இரண்டு குளங்கள் உடைக்கப்பட்டுள்ளன. உடைக்கப்பட்ட குளங்களை மீள வும் சீர்செய்யும் பணிகள் நேற்று முன்தினத்திலிருந்து முன்னெடுக் கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை விவசாய அமைப்புகள் பொதுமக்கள் மற் றும் இராணுவத்தினர் இணைந்து இரண்டாவது நாளாகவும் மேற்கொண்டு வருகின்றனர் என்று மடு பிரதேச செயலா ளர் வினோஜிதா தெரிவித்தார்.

அத்துடன் மடுப் பிரதேசத்தில் 15 தொடக்கம் 20 வீடுகள் பகுதிய ளவில் சேதமடைந்துள்ளன. கடும் காற்றால் வீதிகளில் முறிந்து விழுந்த மரங்கள் அகற்றப்பட் டுள்ளதுடன், மாதா கிராமத்தில் இரண்டு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. தற்போது அவர் கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மடுப் பிரதேச செயலாளர் மேலும் தெரி வித்தார். (ற-213)







கைதடி வடக்கு, மட்டுவில் சந்திரபுரம் மோகனதாஸ் வீதியில் தேங்கியுள்ள வெள்ள நீரை அகற்றும் பணி பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய கனரக இயந்திரமூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சுகாதார அதிகாரிக்கு இடையூறு விளைவிப்போர் மீது சட்டம் பாயும்!

## *பொலிஸ் தலைமையகம் எச்சரிப்பு*

**கொழும்பு, டிசெ.5**
**கொவிட்19 தொடர்பான கடமைகளில் ஈடுபடும் சுகாதார அதிகாரிகளுக்கு இடையூறு செய்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது.**

கொவிட் தொற்றுக்குள்ளான ஒருவரை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அழைத்துச்செல்ல முயன்றபோது அதைத் தடுத்து அவர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த சம்பவம் பண்டாரகம, அட்டுளுகம பகுதியில் அண்மையில் பதிவாகியதையடுத்து இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக தங்கள் கடமைகளில் ஈடுபட்டுவரும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பொலிஸார் கேட் டுக் கொண்டனர். (ற-44)

# ஐவரைப் பதவி நீக்கிய பவித்திரா மீது வழக்கு!

கொழும்பு, டிசெ.5
சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக, இலங்கை மருத்துவ சபையின் தலைவர் உட்பட 5 உறுப்பினர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளனர். இவர்கள் 5 பேரும் பதவிகளில் இருந்து நீக்கப்படுகின்றனர் என அமைச்சர் வன்னியாராச்சி கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கை மருத்துவ சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட குழு வின் பரிந்துரைக்கு அமைய, மருத்துவச் சபையின் உறுப்பினர்களை நீக்கத் தீர்மானித்துள்ளேன் என்று அமைச்சர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

இதன் காரணமாகவே அவர்கள் அமைச்சரின் தீர்மானத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

மருத்துவ சபையின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம், மருத்துவ கட்டளைச் சட்டத்துக்கு அமைய சுகாதார அமைச்சருக்கு இருந்தாலும் நீக்கும் அதிகாரம் இல்லை என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். (ற-இ)

# பி.எச்.ஐ. மீது எச்சில் துப்பிய தொற்றாளருக்கு விளக்கமறியல்

கொழும்பு, டிசெ. 5
அட்டுளுகம பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (பி.எச்.ஐ.) மீது எச்சில் துப்பிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாணந்துறை நீதிவான் முன்னிலையில் சந்தேகநபர் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்தே அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அட்டுளுகம பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளரை அழைத்துவர செல்ல முயற்சித்த போது, குறித்த நபர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பிய தோடு, வாகனத்தில் செல்லவும் மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவர் இன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ஒ,44)



வவுனியாவில்

# மூன்று மணிநேரங்கள் ஒளிர்ந்த சமிக்ஞைகள்

வவுனியா, டிசெ.5
வவுனியா மன்னார் வீதியிலுள்ள ரயில்வே கடவையில் சமிக்ஞைகள் நேற்றுக் காலை 5 மணி தொடக்கம் 8 மணி வரை சுமார் மூன்று மணிநேரமாக தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருந்தமையால் பொதுமக்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொவிட்- 19 தொற்று தாக்கம் காரணமாக வடக்கு பகுதிக்கான ரயில்வே சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள போதிலும், இந்தக் கடவையிலுள்ள ரயில்வே சமிக்ஞை மாத்திரம் திடீர் திடீரென தன்னியக்கமாக இயங்குவதால் பொதுமக்கள் அச்சத்தின் மத்தியிலேயே கடவையைக் கடக்க வேண்டியுள்ளது.

மழையுடான இந்தக் காலப்பகுதியில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரயில்வே திணைக்களத்தினர் உரிய நடவடிக்கைய்யை முன்னெடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-18)

# மூடப்பட்டது கொம்பனித்தெரு ரயில் நிலையம்!

கொழும்பு, டிசெ. 5
கொழும்பு, கொம்பனித்தெரு ரயில் நிலையம் கொரோனா ஆபத்தால் மூடப்பட்டுள்ளது.

அந்த ரயில் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ரயில் நிலையத்தில் பணிபுரிகின்ற ஊழியர்கள் அனைவரும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ.22)





பருத்தித்துறையையும், சாவகச்சேரியையும் இணைக்கும் பிரதான வீதியில், குறிப்பாக சரசாலை குருவிக்காட்டுப் பிரதேசத்துக்கு அண்மித்த பகுதி வெள்ளக் காடாக மாறியுள்ளது. மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-இ)

# அடலுகம மக்கள் பிரதேசத்தைப் பாதுகாக்காவிடில் முடக்கப்படுவர்!

## *இராணுவத் தளபதி எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ.5
அடலுகம பிரதேச மக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு ஆதரவளித்து அவர்களின் பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறும் பட்சத்தில் பல நாள் களுக்குத் தனிமைப்படுத்தப்படுவார்கள் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று தெரிவித்துள்ளார்.

தன்னிச்சையாக வாழும் ஒரு குழுவின் செயற்பாடுகள் காரணமாக முழு களுத்துறை மாவட்டமும் அச்சுறுத்தலுக்குள்ளாவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 292 குடும்பங்கள் பாதிப்பு

**கிளிநொச்சி,டிசெ.5**
**கிளிநொச்சி மாவட்டத்தில் 292 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.**

நேற்று காலை 9 மணி வரை திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், ஒரு வீடு முழுமையாக வும், 93 வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன.
இதேவேளை 2 பாதுகாப்பு அமைவிடங்களில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
19 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.
கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
5 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 78 குடும்பங்களைச் சேர்ந்த 249 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும், 68 வீடு கள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளன.
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது. பாதிப்பு தொடர்பான தகவல்கள் தொடர்ந்தும் திரட்டப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-35)



## உழுவனேரிக் குளம் உடைப்பு: போக்குவரத்து துண்டிப்பு

முல்லைத்தீவு, டிசெ.5
முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் உள்ள உழுவனேரிக்குளம் உடைப்பு எடுத்துள்ளது. இதனால் சிறாட்டிக் குளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.
கடந்த புதன்கிழமை பெய்த கடும் மழை காரணமாக மாந்தை கிழக்கில் பல சிறு குளங்கள் நிரம்பியுள்ளன. இந்நிலையில் உழுவனேரிக்குளம் உடைப்பெடுத்துள்ளது. காட்டாற்று வெள்ளங்கள் வயல் வெளிகளுக்குள் புகுந்துள்ளதுடன் பறங்கி ஆறும் பெருக்கெடுத்து பாய்கின்றது.
இதனால் சிராட்டிக்குளம் கிராமத்துக்கான வீதியின் மூன்று இடங்களில் வீதியை குறுக்கறுத்து மழைவெள்ளம் பாய்கின்றது.
தொடர் மழை பெய்யுமாயின் பறங்கி ஆறு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சிராட்டிக் குளத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அபாய நிலை ஏற்படும் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ந-19)

தென்மராட்சியில்
## வெள்ளத்தால் காலபோக நெற்செய்கை பாதிப்பு!!

சாவகச்சேரி, டிசெ.5
தென்மராட்சி பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையால் காலபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று நெற் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். பிரதேசத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை வயல்களில் பெரும்பாலானவை வெள்ளத்தால் மூடப்பட்டு காணப்படுகின்றன.
விதைப்பு மேற்கொண்ட காலப்பகுதியில் மழையின்மையால் பயிர்கள் அழிவடையும் நிலையில் காணப்பட்டன. ஆனால் தற்போது பயிர்களை மூடி வெள்ளம் காணப்படுவதால் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளது என்று நெற் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ற-9)

முல்லை மாவட்டத்தில்
## வான்பாயும் 66 குளங்கள் மூன்று குளங்கள் சேதம்

முல்லைத்தீவு, டிசெ.5
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாகப் பெய்த கன மழையால் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 66 குளங்கள் வான் பாய்கின்றன.
மூன்று குளங்கள் சிறிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள வெளிக்கோணமடுக்குளம் மற்றும் பாண்டியன் குளம் பகுதியில் அமைந்துள்ள உழுவனேரிக் குளம் மற்றும் சலப்பைக்குளம் என்பன குளக்கட்டில் சிறிய பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன. குளங்களின் பாதிப்பை சீரமைப்புச் செய்யும் பணிகளை கமநலஅபிவிருத்தித் திணைக்களம் விரைவில் முன்னெடுக்கவுள்ளது.
மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை 49 ஆயிரத்து 628 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மாவட்டத்தில் பெய்த கனமழையின் காரணமாக இதுவரையில் 7 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள் ளன.
வெள்ள நீர் வடிந்தோடிய பின்பே பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் தெரிவிக்க முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ-246)



## கோடா வைத்திருந்தவர் கைது!

கொடிகாமம், டிசெ.5
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் கடந்த புதன்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
90 ஆயிரம் மில்லி லீற்றர் (90 போத்தல்) கோடா வைத்திருந்த குற்றச்சாட்டிலே இவர் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ற-159)

## புரேவி தாக்கம்: 65 வீடுகள் சேதம்

திருகோணமலை, டிசெ.5
புரேவி புயலின் தாக்கம் மற்றும் அதிக மழை வீழ்ச்சி காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 64 வீடுகள் சிறியளவிலும் ஒரு வீடு முற்றாகவும் சேதமடைந்துள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோறாள தெரிவித்துள்ளார்.



அத்துடன் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் இருந்த பொதுமக்கள் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர். இருப்பினும் மக்கள் தற்போதைய நிலையில் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும்.
டெங்கு பரவாத வகையில் சுற்றாடலை தூய்மையாக வைத்திருப்பது அனைவரது பொறுப்பாகும் என்றும் தெரிவித்துள்ளார். (ந-30)

## சந்திப்பு...



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு மற்றும் ரஷ்ய தூதுவர் யூரி மெட்டேரி ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. மாவட்டத்தின் கல்வி, மீன்வள மற்றும் விவசாயத் துறைகளின் வளர்ச்சி உட்பட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ந-30)

## முகாம்களைத் தவிர்க்கும் தென்மராட்சி மக்கள்

சாவகச்சேரி, டிசெ.5
மழை வெள்ளம் வீட்டுக்குள் புகுந்து தேங்கி நிற்கும் நிலையிலும், பல குடும்பங்கள் நலன்புரி நிலையங்களுக்குச் செல்ல மறுத்து வருகின்றனர்.
தென்மராட்சியின் 60 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலகத்தால் தற்காலிக தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளபோதும் பாதிப்புக்கு உள்ளான மக்கள் அங்கு செல்லாது, தமது வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.
வெள்ள நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் மூடி அடைக்கப்பட்டதால், நீர் வழிந்தோடாது தேங்கி நிற்கின்றது. அனைத்து காணிகளுக்குள்ளும் வெள்ளம் தேங்கி நிற்பதால் நீர் வழிந்தோடக்கூடிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-9)

# நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையில்

*எச்சரிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்*

**கொழும்பு, டிசெ. 5**

**சர்வதேச நிலைப்பாடுகளை மதிக்காமல் பொருளாதார அபிவிருத்தியை கொண்டுசெல்லவே அரசு முயற்சிக்கின்றது. இது எமது நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்கே கொண்டு செல்லும். அதனால் அரசு பொருளாதார அபிவிருத்தி வேகத்தை வெளிப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அரசு அதிகாரத்துக்கு வந்த முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை வெளியிட்டிருந்தது. அது 1.6 ஆகவே இருந்தது. ஆனால் 2 மற்றும் 3ஆம் காலாண்டு பொருளாதார அபிவிருத்தி வேகத்தை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

ஏன் இதனை மறைக்கவேண்டும். புள்ளிவிவரங்களை மறைப்பது பொருளாதார சந்தையில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும். நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை 9 வீதத்தில் இருந்து 14வீதம் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது எப்படி முடியும்.அரசின் வரிக்கொள்கை புதிய லிபரல்வாத கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவே தெரிகின்றது. அரசு மேற்கொண்டுள்ள வரிக்குறைப்பின் மூலம் நாட்டின் வருமானம் 600 தொடக்கம் 800 மில்லியன் ரூபா வரை இல்லாமல்போயுள்ளது. அரசு மக்களை ஏமாற்றும் கொள்கையையே மேற்கொள்கின்றது.

அரசு வித்தியாசமான பொருளாதாரக் கொள்கையையே பின்பற்றி வருகின்றது. இறக்குமதிகளை தடைசெய்திருக்கின்றது. தேசிய பொருளாதார தரப்படுத்தல் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் சர்வதேச மூதலீட்டாளர்களை கொண்டுவர முடியுமா? அரசின் இறக்குமதி தடைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தின் எச்சரிக்கைக்கு அரசின் பதில் என்ன? என்றார். (கு-இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**லீலாம்பலம் கனகேஸ்வரி**



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தெப்பத்திருவிழா உபயகாரர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் , நயினாதீவு.

பிறப்பு 29.03.1946
இறப்பு 05.11.2020



## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 01 . 1941



இறப்பு 04 . 12 . 2020

**மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை**

**ஓய்வுபெற்ற வெளிக்காத்து அலுவலர்- மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு**

முல்லைத்தீவு செல்வபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை அவர்கள் 04-12-2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மரியநாயகம் செல்லம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரரும், மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற செலஸ்ரின் இன்னேசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லில்லி அக்னஸ் அவர் களின் அன்புக் கணவரும், ஜெயக்குமார்(ஆசிரியர்- வ/அஸ்அமீர் முஸ்லீம் ம.வி), ஜெயறஞ்சினி(ஆசிரியை- மு/றோ.க.த பெண்கள் பாடசாலை), டொறின் சாந்தினி (மன்னார்), அருட்தந்தை அன்ரன் புனிதகுமார்(அவுஸ்திரேலியா), ஜோண்சன் தேவகுமார் (லண்டன்), கொண்சன் அருட்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆன் ஸ்றஜினி(ஆசிரியை- வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம்), வின்சன் யேசுராஜா (அலுவலகப் பணியாளர்- முல்லைத்தீவு ம.வி), யேசுதாசன் றோச் (வெளிக்காத்து அலுவலர் மாவட்ட நீதி மன்றம்- மன்னார்), ஆன் ஜான்சினியா(லண்டன்), வினோதினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டனீசியன், கிசோஜியா, மரியசஜோன், ஆன்டிபோறிக்கா, லுக்சன், பியுஸ்ரன், ஜஸ்லின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 07.12.2020 திங்கட்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் முல்லைத்தீவு செல்வபுரம் புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெற்று பின்னர் சிலாவத்தை சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஜோர்ச் ஜெயக்குமார் -**
**மகன்** 0094773664745**(இலங்கை)**
**அருட்திரு அன்ரன் புனிதகுமார் -**
**மகன்** +61490474648 **(அவுஸ்திரேலியா)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## *68,000...*

இடர்களால் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ள இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், 58 இடைத் தங்கல் முகாம்களில் 10 ஆயிரத்து 604 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

புரேவி புயலால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 250 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 163 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர். அறுவர் காயமடைந்துள்ளனர். 55 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 443 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. 477 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 36 இடைத்தங்கல் முகாம்களில் 941 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 393 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 227 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 784 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 18 இடைத்தங்கல் முகாம்களில் 6 ஆயிரத்து 795 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 462 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 334 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும், 210 வீடுகள் பகுதிளவும் சேதமடைந்துள்ளன., 4 வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ன. 2 இடைத்தங்கல் முகாம்களில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 641 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 925 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 37 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 282 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ-44)

# மரம் வீழ்ந்து வீடு சேதம்

சாவகச்சேரி, டிசெ.5

சாவகச்சேரி சங்கத்தானை முருகன் ஆலய வீதியிலுள்ள வேப்ப மரம் ஒன்று புரேவி புயலால் அருகிலிருந்த வீடொன்றின் மீது குடைசாய்ந்தது. இதனால் வீட்டின் புகைக் கூடு, கூரைகள், சீட் என்பன சேதமடைந்துள்ளதுடன் வீட்டுச் சுவரும் வெடிப்புக்குள்ளாகியுள்ளது.சம்பவ இடத்துக்குச் சென்ற அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் நிலைமை தொடர்பில் ஆராய்ந்து சென்றுள்ளனர். (வ-131)


## மரண அறிவித்தல்

**கணேசு பூமணி**



**தோற்றம் 21.06.1928**
**மறைவு 04.12.2020**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு பூமணி 04.12.2020 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா சந்தணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஸ்ரீவிக்கினேஸ்வரன், ஸ்ரீஜெயந்தி, ஸ்ரீகாந்தா, ஸ்ரீவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசலா, ஸ்ரீகாந்தன், அமீனா, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறவீனா, ரஜினா, ராகுல், கீதப்பிரியன், வித்திய சாலினி, ரிசிகேசினி, தர்மிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்னரத்தினம், பாக்கியம், குணரத்தினம், லீலாவதி, ஜோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், குகன், ஸ்ரீகாந்தி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**இ.ஸ்ரீகாந்தன் 076 929 1829,**
**பா.ஈஸ்வரன் (ஈசன்) 077497 5896**
**(மருமக்கள்)**

**32, குளப்பிட்டி லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 09 . 1942



மறைவு 04 . 12 . 2020

## திருமதி
## பிரான்ஷிஸ்கா ஞானரெத்தினம் றோமுவோள்டர்

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 41/1B, ஈச்ச மோட்டை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்ஷிஸ்கா ஞானரெத்தினம் றோமுவோள்டர் அவர்கள் 04.12.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை றோமுவோள்டர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வெலிச்சோர்பிள்ளை தம்பிராசா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், றொபின் றெட்ணராஜா (யாழ்), யோன்சன் அருள்ராஜா (கனடா), கிறிஸ்ரின் ஞானராஜா (யாழ்), மேவின் குணராஜா (யாழ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யொயிலின் மிரியம், சாந்த பிரபா (கனடா), றீனி ஆகியோரின் மாமியாரும், சிந்தூரி (கனடா), சிறோமி, செரமி, கஸ்ரன், மரினோ, அனிஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (05.12.2020) சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத்தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

**தொடர்புகளுக்கு:**
**றோ.றொபின் றெட்ணராஜா 077 634 1322**
**றோ.ஜோன்சன் அருள்ராஜா (கனடா) 001-6479841322, 001-4162982382**
**றோ.ஞானராஜா 0775162198**
**றோ.குணராஜா 0776623100**
**வ.மனோகரன் 077 568 3933**

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 11 . 1929



மறைவு 04 . 12 . 2020

## சின்னையா நடராசா

**(முன்னாள் உத்தியோகத்தர் சின்னத்துரை பிறதேஸ் - யாழ்ப்பாணம்)**

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் பிளாக் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராசா நேற்று (04.12.2020) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனர் சின்னையா-அன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பொற்கொடி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (பொன்னார்) அன்புக் கணவரும், பகீரதி (நோர்வே), பகீரதன் (U.K), ரேவதி (சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகோபால் (நோர்வே), கிரிஜா (U.K) ஆகியோரின் மாமனாரும், சங்கமி (நோர்வே), சாஜகி (நோர்வே), லக்ஷனா (U.K), அர்ச்சனா (U.K) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, மனோரஞ்சிதம், மகாதேவன் மற்றும் கணேசவேல் ( J.P முன்னாள் உபதபாலதிபர் கந்தரோடை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவாம்பிகை, நவரத்தினம், சர்வேஸ்வரி, சரோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பவனம்**
**பிளாக் வீதி, சங்கானை.**
**021 225 1046**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தென்மராட்சியில் 81 பேருக்கு பி.சி.ஆர் எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி,டிசெ.5

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பகுதிகளில் நடத்திய பீ.சீ.ஆர்.பரிசோதனையில் எவருக்கும் தொற்றில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.


இப் பகுதிகளில் உள்ள தனியார் நிறுவனங்கள்,உணவகங்கள்,வங்கிகள்,வர்த்தக நிலையங்கள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்தவர்கள்,சந்தை வியாபாரிகள் என 81 பேரிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு. மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன. இவர்களுக்கு தொற்று ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## மீனவருக்கு உதவி

மட்டக்களப்பு களுவங்கேணியைச் சேர்ந்த வறிய மீனவர் ஒருவருக்கு கிழக்கின் சிறகுகள் அமைப்பு சுயதொழில் செய்வதற்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கி யுள்ளது.

'எங்கள் மக்கள்' கனடா அமைப்பின் நிதியுதவியில் அவை வழங்கப்பட்டன. (த)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## கதிர்காமு கந்தையா தியாகராசா

**Adm. Secretary Cum Chif Clerk Of Chavakacheri.**
**MPCS.Ltd**
**திதி: 05.12.2020**

**அன்னை மடியில்** **24.07.1942**

**ஆண்டவன் அடியில்** **18.11.2016**

தாய்க்கு சிறந்த தலைமகனாய் பிறந்தீர்கள்
தமிழ் பண்பாட்டு ஒழுக்கத்தில் தவறாது வளர்ந்தீர்கள்
குடும்பத்தில் கோபுரக் கலசமாய்த் திகழ்ந்தீர்கள்
குறிக்கோளில் உறுதியுடையவராய் வாழ்ந்தீர்கள்
நீங்கள் ஆற்றிய பணிகள் தொடர்கின்றது.
நீங்கள் இல்லா வாழ்வு நிலவில்லாத வானமாகியது
ஆண்டு நான்கில் சிரார்த்தம் செய்து உங்கள்
ஆத்மா நற்கதி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கத்தானை
சாவகச்சேரி.

அன்பு மனைவி
பிள்ளைகள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இராமநாதன் வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம் அலுவலக வாகனங்களை செலுத்துவதற்கான அழைப்பின் பேரில் (On-call) சாரதிகளை பதிவு செய்து பணிக்கமர்த்துதல் தொடர்பான கேள்வி விண்ணப்பம்.**

27. 11 2020" திகதி வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1. நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் மருத்துவப் பரிசோதனை சான்றிதழை (Medical Fitness Certificate) நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பித்தல் போதுமானது.
2. சாரதிகளின் அனுபவம் 10 வருடங்களில் இருந்து குறைந்தது 07 வருடங்களாக குறைத்து கருத்திற் கொள்ளப்படும். அத்துடன் மூன்று (03) வருடத்திற்கு மேற்பட்ட காலம் அரச, மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றியிருத்தல் வேண்டும்.
3. அழைப்பின் பேரில் சாரதிகளிற்கான விண்ணப்பப்படிவங்களை 14.12.2020ம் திகதி வரை பொது நிர்வாகக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்.
4. விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி 18/12/2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்

மேலதிக தகவல்களுக்குப் பிரதிப்பதிவாளர் பொதுநிர்வாக கிளை -
Tele 021 2226517. Fax:- 021 2226517.
பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# அறிவித்தல்

## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாணம்

வடக்கு மாகாண தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக்கல்வி (ஆங்கிலம்) ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு I (இ) தரத்திற்கு, ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2020
தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் கோரப்பட்ட மேற்படி பதவிக்குரிய விளம்பரம் தொடர்பாக,

01. விளம்பரத்தின் பந்தி 04.5 ஆனது பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
02. இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.01.04 வரை நீடிக்கப்படடு ள்ளது.
03. மேலதிக விபரங்களை www.np.gov.lk எனற் வடக்கு மாகாண சபை இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.
05.12.2020

உ
சிவமயம்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**யோகாம்பிகை இராமலிங்கம்**
(நாரந்தனை)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28.11.1939 | 05.12.2017 |

நாளெல்லாம் நலமாய் வாழ காலமெல்லாம்
கரம் தந்த வாழ்வின் தீபமே!
நித்தம் உங்களை தேடித்தேடி அழுகின்றது மனசு
நித்தம் இரங்கும் இறைவன்
ஏன் அழைத்தான் உங்களை
ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறவில்லை நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய மனோன்மணி அம்பிகையை
வேண்டுகின்றோம்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினரும், உறவினர்களும்.

## 1ஆம் ஆண்டு நினைவு நாள்

இறை நிலை எய்திய எம் அன்புத்தாயாம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.08.1948 | 15.12.2019 |


**குணபாலசிங்கம் அருந்ததி**
(தலைவி நாகவரத நாராயணர் தேவஸ்தானம் - அளவெட்டி)
பூச நாட்சத்திரம் - பஞ்சமி திதி

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்த்தம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாகேஸ்வரம்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.02.1952 | 03.12.2020 |

**எபநேசர் ஞானானந்தன் செல்வதுரை**

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், லெய்ற்றன் பார்க் சர்வதேசப் பாடசாலையின் தலைமை ஆசிரியருமான எபநேசர் ஞானானந்தன் செல்வதுரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் தம்பதியரின் மருமகனும், கீதாகுமாரியின் (ஓய்வுநிலை ஆசிரியர்), அருமைக் கணவரும், துஷ்யானந்தன், சிந்துஜா, ஜெருஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஷா, ஜவர், கரிகாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்மதேவி, சாரதாதேவி, செல்வானந்தன், காலஞ்சென்ற கருணானந்தன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

மாத்தளையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் சார்பில்
திருமதி வி.இலட்சுமணன்.

---


**யாழ்நகரில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பின்வருவோர் உடன் தேவைப்படுகின்றனர்**

1.Receptionst (Female)
2.Secretary (Female)
3.Marketing / Field officer (Male/Female)
4.English Teachers
5.Project Assistant (Male/Female)
6.Lectures(IT/Nursing/HR/Hospitality and Tourism/LAW)

விண்ணப்பங்களை / CV பின்வரும் Email முகவரிக்கு அல்லது Whatsapp இற்கு அனுப்பவும்.

Email:- iipm2666@gmail.com
Whatsapp - 076 931 1088
International Knowledge Pool
100,Rasavinthodam Road,Jaffna.


ஆறாத துயரத்துடன்
## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 34ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவலைகளும்

அமரர்
**விஜேந்திரன் பிரதீபன்**
(யாழ். மத்திய கல்லூரி - மாணவன்)



தாயின் மடியில்
01.02.1986
தண்ணீரின் அடியில்
05.12.2005

ஒளி தந்த சுடர் விளக்கை
விதி கொண்டு சென்றதோ
கழிகின்ற பொழுதெல்லாம்
விழிகள் நீரில் மிதக்கின்றதே
விழிகள் மூடிய பின்பும்
விழித்திரையில் உந்தன் விம்பமே
உன் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்
ஓம்சாந்தி ! சாந்தி ! சாந்தி!

பரந்தன் - அன்ரி -

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்
## 24ஆம் ஆண்டு ஞாபகார்த்த தினம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16.07.1936 | 05.12.1996 |



நாக மரம் எம் தேசிய மரம்
நாக மணி எம் சமூக வரம்
நீ அன்று நட்ட விதை இன்று
நீல வானமென உயர்ந்து
கல்வி விளையாட்டு ஆன்மீகம் கலையென
கரைகடந்து காட்டாறாய் ஓடுது
அன்று நீ கண்ட சமூக ஒற்றுமைக் கனவு
இன்று நனவாக முயலும் இந் நாளில்
உன் சிரம் தாழ்ந்து
நின் மலர் தூவி அஞ்சலிக்கிறோம் ...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையமும்
மற்றும் ஏனைய உப அமைப்புக்களும்.

## மரண அறிவித்தல்



**விட்டுணுசாமி தேவமணி (மணியக்கா)**

தொல்புரம் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விட்டுணுசாமி தேவமணி (மணியக்கா) 04.12.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2020) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, திருவழிநிலை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் மத்தி, சுழிபுரம்
077 936 1182,
077 635 4563.

தகவல் :
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

'ஈஸ்டர் தாக்குதல்'
## நடவடிக்கை இல்லையேல் மாற்று வழியை நாடுவோம்
ராஜபக்ச அரசுக்கு பேராயர் மிரட்டல்

கொழும்பு, டிசெ. 05

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு உரிய வகையில் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாற்று நடவடிக்கையை நாட வேண்டி ஏற்படும். இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன பேராயரை நேற்று சந்திக்கச் சென்றிருந்த போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கத்தோலிக்க மக்கள் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான உண்மை நிலைமை எப்போது வெளிவரும் என்று காத்துக் கொண்டிருக்கின்றனர். குண்டுத் தாக்குதல் நடத்தியமை, அதற்கு உதவியமை, நிதி வழங்கியமை தொடர்பில் நாம் திருப்தி அடையக்கூடிய வகையில் விசாரணைகள் இடம்பெற்றதா என்ற எண்ணம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அது அவ்வாறே காணப்படுகின்றது என்பதை துரதிஷ்டவசமாக எமக்குக் கூற வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் ஏற்படும் பிரச்சினைகளால் இந்த விசாரணைகளை பின்தள்ள வேண்டாம் என அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். ஜனாதிபதியால்-இந்த அரசால் உறுதியான வாக்குறுதி வழங்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி அதனுடன் தொடர்புடைய ஆணைக்குழுக்கள் குறித்து மாத்திரமன்றி குறிப்பாக அரச நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் விடயங்கள் ஆராயப்படும் என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இல்லையெனில் மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும். வேறு குழுக்களுக்கு இந்தப் பொறுப்பை வழங்க நேரிடும் என்றார். (ஒ-22)


**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 077 2626944

**உயிரியல் (BIOLOGY)**
விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் தனி அல்லது குழு வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படும்.
தொடர்பு:076 833 6612

**பணிப்பெண் தேவை**
வயோதிபப் பெண்ணை பராமரிப்பதற்கு கொக்குவிலில் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. (முழு நேரம்)
தொடர்புகளுக்கு:
0770041285, 0763046138

**அறை, வீடு வாடகைக்குத் தேவை**
நல்லூர் பிரதேசத்துக்குள் அறை or சிறிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:077 640 2406

**பிரத்தியேக வகுப்புக்கள்**
9,10,11 வகுப்புகளுக்கான விஞ்ஞானம்
தரம் - 05 புலமைப்பரிசில் வகுப்புக்கள்
(இருவேறு ஆசிரியர்கள்)
தொடர்பு:
075 9454 578

திருமணம் நிச்சயமே நிர்ப்பந்தம் அல்ல

**விநாயகர் திருமண சேவை**



➤ எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன.
➤ பதிவுக்கட்டணம் இலவசம்.

தொ. பே. இல: 077 255 0807
முகவரி: இல. 22, முருகன் கோயிலடி, தாவடி தெற்கு, தாவடி

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
1. சமையலாளர் 4.துப்புரவு பணியாளர்
2. ரொட்டி தயாரிப்பாளர்
3. பரிமாறுபவர்
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
0212228280,0778828800,0770616089

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா தில்லைநாதன்**
(ஆட்டோ. Van நாதன் அண்ணை)
திதி: 05.12.2020


பிறப்பு 29.09.1956
இறப்பு 16.12.2019

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசிர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!

குடும்பத்தினர்.
பிள்ளையார் வீதி,
அளவெட்டி மத்தி.

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 09 . 1924



இறப்பு 28 . 11 . 2020

## திருமதி இராஜவதி செல்லையா

(இளைப்பாறிய சாப்பாட்டு மேற்பார்வையாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)

கம்பளையைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை, கனடா, ரொரன்ரோவை வதிவிடமாக வும் கொண்ட இராஜவதி செல்லையா 28.11.2020 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா (ஆசிரியர் - புன்னாலைக்கட்டுவன்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீகஜமுகன் (மோகன் - கனடா), ஸ்ரீகஜகரன் (கரன் / ராஜன் - அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும், மேகலா, சுஜாதா, கவிதா, அமுதா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (கிளாக்கர்), நமசிவாயம், சோமசுந்தரம், தியாகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசம்மா, நல்லம்மா, அருளம்மா, செல்லம்மா, ராசலெட்சுமி, அன்னலெட்சுமி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும், அஸ்வின், அஜன், தனுஷ், ஆரணி, அஷ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

பார்வை - 06.12.2020 9.30 - 11.00 am
Funeral Home : - Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham
Service : - 11.00 am - 12.30 pm
Crimation : - 1pm at High land Hills Located.at 12492 Woodbine Ave, Gormley,ON

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமுதா, பபி
(மருமகள்)

தொடர்புகளுக்கு:
கஜமுகன்/ மோகன் (416) 614 - 6902 (கனடா) மகன்
கரன்/ ராஜன் (646) 245 - 4006 (அமெரிக்கா) மகன்
ஸ்ரீகா (அமுதா - 016 4799 72050)
பபி - மானிப்பாய் - 075 746 8101

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## வழங்குனர்களை பதிவுசெய்தல்- 2021

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது 2021ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணினி, இலத்திரனியல் பொருட்கள், நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள்கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், |
| A - 11 | எரிபொருட்கள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B – 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம், அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B – 03 | காற்றுகுளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B – 04 | அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல் |
| B – 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும், பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார் முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 09 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 10 | சகல விதமான வாகன சுத்திகரிப்பும், உராய்வு நீக்கிகளும் |
| B- 11 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்) |
|---|---|
| C – 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C – 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

1. வழங்கல்கள் 2021ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம்
   தொகுதி -A க்கு ரூ. 200.00 (VAT, NBT நீங்கலாக), தொகுதி-B க்கு ரூ.500.00 (VAT, NBT நீங்கலாக) தொகுதி-C க்கு ரூ. 1000.00 (VAT, NBT நீங்கலாக) செலுத்தி தலையைலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
4. விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2021** எனக்குறிப்பிட்டு **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்"** எனும் முகவரிக்கு 28.12.2020ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   மேலதிக விபரங்களை புத்தூரில் அமைந்துள்ள தலைமைஅலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

05.12.2020

# மரண அறிவித்தல்

## திருமதி குணரத்தினம் யோகம்மா

தோற்றம்: 01.05.1926 மறைவு: 03.12.2020



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடா, மொன்றியலில் வாழ்ந்து வந்தவருமான திருமதி குணரத்தினம் யோகம்மா 03-12-2020, வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - ஆச்சிமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற குணரத்தினம் (முன்னாள் கலாவதி கபே மன்னார் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கலாவதி (மொன்றியல்), சீலாவதி (ஜேர்மனி), காலஞ் சென்ற லோகநாதன் (மொன்றியல்), யோகநாதன் (மலர் ஸ்ரோர் மன்னார்), புஷ்பலதா (கந்தர்மடம்), குணநாதன் (மொன்றியல்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற சிவபாலசிங்கம், தர்மராஜா, ஞானரூபி, அன்பரசி, பாலகிருஷ்ணன், கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரவணபவன், சந்திரவதனி, சாதனா, மாதினி, சிவதர்சினி, தயாநிதி, தீபா, பிரதீப், பிரசன்னா , பிரித்தா, அபிராம், ரஜகுலன், லோஜனா, கிருசனா, காண்டீபன், தேனுஜா, குலாசிகா, அபிஷேக், குனேசிகா ஆகியோரின் பேர்த்தியாரும், துவாரகா, சஞ்சீவ், சஞ்சிதா, கிருஷ்ணவி, ரிஷிகேஸ், ஜானுஜன் ஜசிந்தா, ஜனுசா, கங்காசுதந்தரி, சாயிலகரி, பாலசுயம்வரி, ராம்ஜித் ரோஜித் அர்ச்சிதா, ஆரன், ஆருசன், ஆதிரை ஆகியோரின் பாசமிகு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06-12-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint Laurent, QC, H4N 1J7 என்ற முகவரியில் பார்வைக்காக காலை 9 மணி - 10 மணி வரை உறவினர்களுக்காகவும் 10 மணி - 2 மணிவரை நண்பர்கள் மற்றும் பார்வையாளர்களுக்காகவும் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் அவரது பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: பாலகிருஸ்ணன் (மருமகன்) (077 126 7775
யோகநாதன் (மகன்) 076 435 9918

தகவல்:
குடும்பத்தினர்

# ஆசிரிய சேவை செய்து ஓய்வுபெறுதல்




**வைரவரின் அருளோடு முப்பத்தாறு வருடங்கள் சேவை செய்து நேற்று (04.12.2020) வியாழக்கிழமை ஓய்வு பெற்றுள்ளார்**

## திருமதி தவேந்திராதேவி சிவகுருநாதன்

(இரசாயனவியல் ஆசிரியர்)

இலங்கை ஆசிரிய சேவை - வகுப்பு - I

(SLTS - Class-I)

பிறந்த திகதி: **05.12.1960**

**கல்வி கற்ற பாடசாலைகள்**

1. ஆரம்பக்கல்வி - யா/மெய்கண்டன் மகாவித்தியாலயம் இளவாலை
2. இடைநிலைக்கல்வி - இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்
3. உயர்தரக் கல்வி - மகா ஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை

**கல்வித்தகைமை**

விஞ்ஞானப் பட்டதாரி (உயிரியல்) (B.Sc.Bio) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
முதுகலைமாணி (கல்வி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தொழில்தகைமை**

பட்டப் பின் கல்வி டிப்ளோமா, யாழ்ப்பாணப் பல்கலைகழகம் (P.G.D.E.)
முதுகல்விமாணி யாழ்ப்பாணப் பல்கலைகழகம் (M.Ed)
சித்தாந்த இரத்தினம் (திருவாவடுதுறை ஆதினக்கிளை - இணுவில்)

**குடும்பவிவரம்**

**தாய் : திருமதி மகேஸ்வரி தம்பிப்பிள்ளை**
(வீரசிங்கம் சட்டம்பியாரின் கனிஷ்ட புத்திரி)

**தந்தை : அருணாசலம் தம்பிப்பிள்ளை** (அமரர்)
(இளைப்பாறிய முன்னாள் அதிபர் - யா / புனித யோசேப் மகாவித்தியாலயம் மாதகல்)

**கணவர் : பொன்னம்பலம் சிவகுருநாதன்**
(விஞ்ஞான பட்டதாரி (கணிதம்) விசேடம்
(B.Sc. (Maths), Hons) யாழ்ப்பாணப் கல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (P.G.D.E) யாழ்ப்பாணப் கல்கலைக்கழகம்
இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - I
இளைப்பாறிய முன்னாள் பிரதி அதிபர்,
யாழ் / புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை.

**பிள்ளைகள் :**
1. **சிவகுருநாதன் மகீபன்**
(உதவி எந்திரவியலாளர் (கட்டுநாயக்கா)
2. **வைத்தியகலாநிதி ஜோதிஜி வினோதன்**
(M.B.B Sc யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
3. **சிவகுருநாதன் சுபந்தன்**
(திருமுறை நெறிச் செல்வர் - திருவாவடுதுறை - ஆதீனக்கிளை - இணுவில்)

**பேரப்பிள்ளைகள் : செல்வி கனிஷ்னி, மகீபன்**

**சேவை விவரம் : முதல் நியமனத்திகதி 05.08.1984**

1. தி / சேனையூர் மகாவிததியாலயம் கட்டைபறிச்சான், மூதூர்.
**05.08.1984 - 07.01.1988 - 3** வருடங்கள்
2. தி / இ.கி.மி. இந்துக் கல்லூரி திருகோணமலை.
தற்போது கோணேஸ்வரா இந்துக் கல்லூரி .
**08.01.1988 - 13.08.1989 - 2** வருடங்கள்
3. யா / புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை
**14.08.1989 - 22.01.2014 -** ஏறத்தாழ **25** வருடங்கள்
சிரேஷ்ட பிரிவுத் தலைவர் **(S.S.S)**
**(01.01.2009 - 31.12.2013 - 5** வருடங்கள்)
4. யா / இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்
**23.01.2014 - 04.12.2020 -** ஏறத்தாழ **6** வருடங்கள்
விஞ்ஞானம், ஆங்கிலம், இருமொழி ஊடக கற்கை விஞ்ஞானம்
5. யா/மெய்கண்டான் மகாவித்தியாலயம், இளவாலை
விஞ்ஞானம் - ஒரு மாதம்

**பெற்றோர், கற்பித்த ஆசியர்கள்,
வழிகாட்டியவர்கள், ஆதரவாளர்கள், இவர்களைத் தந்த
இறைவனுக்கும் நன்றி**

**குடும்பத்தினர்
பாடசாலைகளின் சமூகம்.**

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# பொது அறிவித்தல் – 2021

1. **படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2021 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

2. **வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2021**

2.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149,150,151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2021ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங் களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 2021.03.31 ஆம் திகதிக்குள் மீளச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள் கின்றேன்.

3. **வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அனுமதியின்றி ,சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்ற மென்பதை அறியத் தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப் பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றி தழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.

4. **சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2021**

4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, எமக்கு வழங்கப்பட்ட குறிக்கபட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை களில் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற் குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2021 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப் பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

5. **விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங் களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 28.02.2021 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நட வடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரப் பலகைகளுக்குப் பிரதேசசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் அகற்றப்படும்.

6. **பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கட லுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதி யோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியதருகின்றோம்.

7. **பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

8. **பொது இடங்களில் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப் போடுதல் தடைசெய்யபட்டுள்ளது.**

8.1. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரியகட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

9. **பொதுசுகாதாரம் பேணுதல்.**

9.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணு வதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல், இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக் காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

11. **சபை எல்லைக்குள்.**

11.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல், கிரவல் என்பவற்றுக்கான வழிஅனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

11.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்

12. **துவிச்சக்கர வண்டிகளிற்கான உரிமம் பெறல்**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 148ஆம் பிரிவுக்கு அமைவாக 2021ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டிகளிற்கான உரிமத்தினை 2021.03.31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அ.தவக்குமாரன்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2020.12.05**

# 52 வீதமான கைதிகள் போதைக்கு அடிமை!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.5**
**இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் மொத்தமாக 28 ஆயிரத்து 541 கைதிகள் உள்ளனர். அவர்களில் 52 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் அனுரகுமார திஸாநாயக்கவால் கடந்த திங்கட்கிழமை கேட்கப்பட்ட கேள்விக்கு நேற்று பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, 2019 ஆம் ஆண்டு புள்ளி விவரத் தகவல்படி சிறைச்சாலைகளில் இருக்கும் மொத்த கைதிகளில் 52 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்கள். இதனால் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு தேசிய வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.
அதன் பிரகாரம் வேரகல பிரதேசத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பவர்களுக்கு இரண்டாயிரம் விடுதி அறைகளை அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.
அத்துடன் போதைக்கு அடிமையானவர்கள் சிறைச்சாலைக்கு வந்த பின்னர் அடிக்கடி சமூகமயமாகி வருகின்றனர்.
அதனால் போதையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்து சிறைச்சாலையி லிருப்பது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வாகாது என உணர்ந்துகொண்டு, அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (ற-இ)

# அச்சுவேலி பகுதியில் விவசாயப் பயிர்கள் அழிவு

அச்சுவேலி, டிசெ.5
கடந்த சில தினங்களாக பெய்த பெருமழை மற்றும் கடும் காற்றால் யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களில் பெரும்பகுதிகள் சேதமடைந்துள் ளன.
யாழ்.மாவட்டத்தில் விளைபயிர்களான வெங்காயம், கரட், கத்திரி, மிளகாய், கோவா, லீக்ஸ், மரவள்ளி ஆகிய பயிர்கள். தோட்ட நிலங்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் அழுகி சேதமடைந்துள்ளன. வீசிய கடுங்காற்றால் வாழைகள் பெருமளவில் முறிந்து அழிவடைந்துள்ளன.
இந்நிலையில் சந்தையில், மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதுடன்; மரக்கறி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை இவ் அனர்த்தத்தால் தாம் பொருளாதார இழப்புக்கு உள்ளாகி உள்ளோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ந-11)

புரேவியின் தாக்கம்

# நெடுந்தீவு சென்று பார்வையிட்ட மாவட்டச் செயலக குழுவினர்

யாழ்ப்பாணம், டிசெ. 5
புரேவி புயல் இடரால் பாதிக்கப்பட்டுள்ள நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவை, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையிலான குழுவினர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை இந்தக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். பின்னர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் பங்குபற்றினர். (ஒ,111)



# அமைச்சர் சரத் வீரசேகர மன்னிப்பு கோர வேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் காட்டம்

கொழும்பு, டிசெ.5
விடுதலைப் புலிகளை ஒழித்தபோதே கூட்டமைப்பையும் தடை செய்திருக்க வேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்து பாரதூரமானது. எனவே, அவர் சபையில் மன்னிப்புக் கோர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.
கூட்டமைப்பு தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்தையடுத்து சபையில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இதன்போதே சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அரசாங்கத்தின் செயற்பாடுகளாலேயே இனவாதம் வளர்ந்து வருகிறது. தமிழ் மக்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, உரிய நிரந்தர தீர்வை வழங்குங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# புலிகளின் தளபதி எனத் தெரிவித்து பொலிஸ்மா அதிபருக்கு மிரட்டல்!

## மலேசியாவில் ஒருவர் தேடப்படுகின்றார்

யாழ்ப்பாணம், டிசெ. 5
தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி எனக் கூறி, மலேசிய பொலிஸ்மா அதிபருக்கு கொலை மிரட்டல் விடுத்த ஒருவரை மலேசிய பொலிஸார் தேடி வருகின்றனர்.
சந்தேகநபர், புக்கிட் அமன் பொலிஸ் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சை தாக்கவுள்ளேன் என அச்சுறுத்தி ஊடகங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.
இதையடுத்து மலேசிய பொலிஸ் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 507 மற்றும் தகவல் தொடர்பு மற்றும் மல்டிமீடியா சட்டத்தின் 1998ஆம் ஆண்டு பிரிவு 233 என்பவற்றின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# பண்டிகைக்கால வியாபாரத்துக்கு தெற்கு வியாபாரிகளுக்குத் தடை

## மன்னார் நகர முதல்வர் தெரிவிப்பு

மன்னார், டிசெ.5
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்து இம்முறை பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள, மன்னாருக்கு வரும் வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.
இவ் விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,
நாட்டில் கொரோனாத் தாக்கம் அதிகரித்த நிலையில் உள்ளது. இதனால் நாட்டின் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மக்களைப் பாதுகாக்க



வேண்டிய கடமை எமக்கு உள்ளது. ஒவ்வொரு வருடமும் மன்னார் மாவட்டத்தில் நத்தார் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்கு அதிக அளவில் தென்பகுதி வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமை. ஆனால் இந்த முறை இவ் வியாபார நடவடிக்கைகளுக்கு மன்னார் நகர சபை தடைவிதித்துள்ளது.
வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் உள்ளூர் வியாபாரிகளுக்கு மாத்திரம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார் நகர சபை உரிய அனுமதியை வழங்கும். புதிதாக எந்த வியாபாரிகளுக்கும் அனுமதி வழங்கப்படாது. நாட்டில் கொரோனாத் தொற்றின் தாக்கம் முழுமையாக நீங்கிய பின்னர் எதிர்வரும் காலங்களில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். (ந56)

# தாயகம் திரும்பிய ரஷ்ய கப்பல்கள்!

திருகோணமலை, டிசெ.5
திருகோணமலை துறைமுகத்துக்கு வருகை தந்த மூன்று ரஷ்ய கடற்படைக் கப்பல்கள் நேற்று முன்தினம் அங்கிருந்து தாயகம் நோக்கிப் புறப்பட்டன. ரஷ்ய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் நவம்பர் 30 ஆம் திகதி திருகோணமலைத் துறை முகத்துக்கு வருகை தந்தன. இந்த கப்பல்கள் எரிபொருள் நிரப்புவதற்கும் சிறிது தரித்து நிற்பதற்கும் வருகைதந்தன என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ற-இ)

### கார்த்திகை....

பட்ட விடயமாகும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் நடைபெற்ற மாவீரர் தின நினைவேந்தலின்போது, பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முன்பகுதியில் 'கார்த்திகைப் பூ' ஒளிரச் செய்யப்பட்டமை தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று கேள்வி எழுப்பியிருந்தது. அதற்குப் பதிலளிக்கும்போதே பிரிட்டன் தூதரகம் இவ்வாறு தெரிவித்துள்ளது. பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பேரணிகள் உட்பட அனைத்து விடயங்களையும் கையாள்வது பொலிஸாருடன் தொடர்புபட்ட விடயம் எனப் பிரிட்டன் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரிட்டன் தூதரகம் ஒரு வரியில் பதிலளித்துள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-22)

### எங்கு...

அதிகளவு மழைவீழ்ச்சியாக 279.8 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆனால், மாந்தை கிழக்கில்தான் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 392மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

எங்கு, எவ்வளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று மக்களுக்குக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களிலிருந்து விலகி, விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய தேவை மக்களுக்கு உண்டு. எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் சரியான தகவல்களை வெளியிடவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (து)

### வேடிக்கை...

தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

காணாமல்போன மாணவன் தோணிக்கல்லைச் சேர்ந்தவர் என்றும், பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் கற்பவர் என்றும் கூறப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையால் வவுனியா புதுக்குளத்தில் உள்ள குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. மேலதிக நீர் சுருங்கை வழியாக வெளியேற்றப்படுகின்றது. அதைப் பார்ப்பதற்காக மக்கள் அங்கு தினமும் செல்கின்றனர்.

குளத்தில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதைப் பார்க்க நேற்று மதியம் நண்பர்களுடன் இந்த மாணவன் சென்றிருக்கின்றார். நீர் பாய்ந்தோடும் வாய்க்கால் பகுதியில் அவர் இறங்கியபோது அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கிருந்தவர்களால் அவரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் கண்டுபிடிக்க முடியவில்லை. தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்களும் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், தேடும் நடவடிக்கைகளையும்தீவிரப்படுத்தியுள்ளனர். (எ-ரி3,18)

### நந்திக்....

வங்காள விரிகுடாவில் உருவாகிய 'புரேவி' புயல் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடுமையான காற்றுடன் கூடிய மழை பொழிந்தது. காற்று காரணமாக நந்திக் கடற்கரையில் நிறுத்தி வைத்திருந்த வள்ளம் ஒன்று நந்திக்கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வள்ளத்தை கரைக்கு கொண்டு வருவதற்காக நேற்றுமுன்தினம்காலை 10 மணிக்குத் தனது சகோதரனுடன் பிறிதொரு வள்ளத்தில் சென்றுறுள்ளனர். காற்றில் அடித்துச் செல்லப்பட்ட வள்ளத்தில் ஏறியபோது அந்த வள்ளம் நீரில் மூழ்கியது. அவரும் காணாமல் போயிருந்தார். அவரை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் மீனவர்கள் இணைந்து நந்திக்கடல் களப்பில் மீனவரை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். நேற்றுக் காலை காணமல் போயிருந்த மீனவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேவேளை பொன்னாலையில் காணாமல் போன மீனவர் நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டிருந்தார். (ஒ,இ)

### குளங்களின்..

மாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை 26 அடி வான் உயரம் கொண்ட கல்மடு குளத்தின் நீர் மட்டம் 22 அடி 3 அங்குலமாகவும், 12 அடி வான் உயரம் கொண்ட பிரமந்தனாறு குளத்தின் நீர் மட்டம் 8 அடி 3 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

25 அடி வான் உயரம் கொண்ட அக்கராயன்குளத்தின் நீர் மட்டம் 19 அடி 10 அங்குலமாகவும், 10 அடி வான் உயரம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் மட்டம் 7 அடி 3 அங்குலமாகவும், 19 அடி வான் உயரம் கொண்ட புதுமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் 15 அடி 7 அங்குலமாகவும் காணப்படுகின்றது. 8 அடி வான் உயரம் கொண்ட குடமுருட்டி குளத்தின் நீர் மட்டம் 8 அடி 4 அங்குலமாக உயர்ந்துள்ள நிலையில், 4 அடி வான் பாய்கின்றது. 9 அடி 6 அங்கும் வான் உயரம் கொண்ட வன்னேரிக்குளத்தின் நீர்மட்டம் 9 அடி 8 அங்குலமாக உயர்ந்துள்ள நிலையில், 2 அடி வான் பாய்கின்றது.

தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பதில் இரத்தினபுரம், கனகாம்பிகைகுளம், ஆனந்தபுரம் கிழக்கு மற்றும் பன்னங்கண்டி, உமையாள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (எ-6)

### கரவெட்டியில்...

நடந்துள்ளது.

கட்டைவேலி, கரவெட்டியைச் சேர்ந்த நெல்லியடி மத்திய கல்லூரி உயர்தர மாணவனான தே.லக்சன் (வயது18) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். பெற்றோர் இல்லாத நிலையில், சகோதாரியுடனே இவர் வசித்து வந்துள்ளார்.

நண்பர்களுடன் இணைந்து குளத்தில் காணப்பட்ட கழிவுப் பொருள்களை அகற்றினர் என்றும், அதன்பின்னர் குளத்தில் குளிக்க முயன்றபோது லக்சன் நீரில் மூழ்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. நண்பர்கள் அவரைக் காப்பாற்ற முயன்றபோதும், அது பயனளிக்கவில்லை. அதன்பின்னர் நீச்சல் தெரிந்தவர்கள் அழைக்கப்பட்டு லக்சனை மீட்க முயன்றபோது நேரம் கடந்திருந்தது என்று அங்கிருந்தவர்கள் கூறுகின்றனர். அந்தக் குளத்தில் சேறு அதிகமிருந்தால் அவரை மீட்கும் முயற்சி பயனளிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

மாலை 5 மணியளவில் லக்சன் நீரில் மூழ்கிய நிலையில், இரவு 7 மணியளவில் அவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். அவரது உடல் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. (எ-26)

### தடுத்தது...

தமிழ் இந்து மக்களின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான கார்த்திகை விளக்கீடு அன்று தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய அராஜகங்களுக்கு அரசு உடனடியாக தனது மன்னிப்பைக் கோரவேண்டும் அல்லது குறைந்தபட்சம் நடந்து முடிந்த சம்பவங்களுக்குத் தனது வருத்தத்தையாவது தெரிவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காலம். இந்தக் காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள்ளது. அதேவேளை, பயங்கரவாதச் தடைச் சட்டமும் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. இந்த இரு சட்டங்களையும் மீற எவருக்கும் அனுமதி இல்லை.

போரில் உயிரிழந்த உறவுகளைத் தமிழர்கள் நினைவுகூர வேண்டுமெனில் வீடுகளில் அமைதியாக இருந்து நினைவுகூரலாம். அதேவேளை, தமிழ் இந்துக்கள் தமக்குரிய பண்டிகைகளைக் கொண்டாட வேண்டுமெனில் வீடுகளில் இருந்து தங்கள் குடும்பத்துடன் கொண்டாட முடியும்.

இதைவிடுத்து தற்போதைய நிலைமையில் பொது இடங்களில் எந்த நிகழ்வுகளையும் ஆடம்பரமாகக் கொண்டாட முடியாது.

அரசின் இந்த வேண்டுகோள் சாதாரண தமிழ் மக்களுக்கு விளங்குகின்றது. ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அவர்களின் தூண்டுதலின் பிரகாரம் செயற்படும் நபர்களும் எமது வேண்டுகோளை உதாசீனம் செய்கின்றார்கள். நீதிமன்றங்களின் தடை உத்தரவுகளுக்கும், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் சவால் விடும் வகையில் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

தமிழ் இந்து மக்களிடம் அரசு மன்னிப்புக் கோர வேண்டும் அல்லது வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரிக்கை விடுப்பது வெட்கக்கேடானது; சிறுபிள்ளைத்தனமாது- என்றார். (எ-22)

### தனிமைப்படுத்தலை...

பட்டுள்ளது.

வவுனியா கல்மடு ஈஸ்வரி புரத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் கொழும்பு கொட்டகேனாவில் உள்ள பிரபல நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர்14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கொரோனாத் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வவுனியாவில் உள்ள அவரது வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 22ம் திகதி வவுனியா கல்மடு ஈஸ்வரிபுரத்தில் உள்ள வீட்டுக்குச் சென்ற இளைஞன் அங்கு 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டார். அவருக்கு 2ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் முடிவுகளில் இளைஞனுக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். (ஒ,இ)

### கிளி...

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீள இயங்க ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலும், காரைநகரிலும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளும், காரைநகர் இந்துக் கல்லூரியும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

தற்போதைய நிலைமைக்கு ஏற்ப, பாடசாலைகளை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு, வடக்கு மாகாணக் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

### நேற்றும்...

வைரஸ் தொற்றியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 23 ஆயிரத்து 5 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 555 ஆக அதிகரித்துள்ளது.

19 ஆயிரத்து 438 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 988 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

### சட்டவிரோத...

அகற்றியமைக்காக பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலானர்வர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான ஊரெழு அம்மன் வீதி திருத்தப்படும் என்று கூறி அடிக்கல் நட்டுள்ளனர். அந்த வீதியைத் திருத்தும் முகவராக வீதி அபிவிருத்தி அதிகார சபை பெயர் பொறிக்கப்பட்டு, பெருந்தெருக்கள் அமைச்சர் போன்றவர்களின் படங்களுடன் காட்சிப் பதாகை ஒன்றும் அங்கு பொருத்தப்பட்டது.


அனுமதி பெறாது அமைக்கப்பட்ட இந்தக் காட்சிப் பாதாகையை அகற்றுமாறு வீதி அதிகார சபைக்கு, சபைத் தவிசாளர் கடிதம் மற்றும் தொலைநகல் மூலம் அறிவித்திருந்தார். ஒரு கடமைநாளின் பின்னரும் அது அகற்றப்படாதிருந்த நிலையில், அந்தக் காட்சிப்பதாகை அகற்றப்பட்டு, பிரதேச சபைக்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் வீதி அதிகார சபை முறைப்பாடு செய்திருந்தது. அதையடுத்துப் பிரதேச சபைக்கு சென்று தவிசாளரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை, சபையின் அனுமதி இன்றி வீதி அதிகார சபை சீரமைக்க முயன்றமை சட்டவிரோதம். சபை ஒன்றுக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தை நிலைநாட்டவே காட்சிப் பதாகை அகற்றப்பட்டது. உரிய முறைப்படி அனுமதி பெறப்பட்டால் அல்லது அணுகினால் காட்சிப் பதாகையைக் கையளிக்கத் தயராக இருக்கின்றோம் என்று சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (எ-26)

# ஆஸியை ஊதித்தள்ளிய இந்தியா

## கன்னிப் போட்டியில் நடராஜன் அட்டகாசம்




கான்பரா, டிசெ. 5
இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு இருபது போட்டியில் நடராஜன், சஹால் பந்துவீச்சில் ஜொலிக்க 11 ஓட்டங்களால் ஆஸியை வீழ்த்தியது இந்தியா.
கான்பரா மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இந்தியா சார்பில் கே.எல்.ராகுல், தவான் இணை ஆரம்பம் வழங்கினர். தவான் 1 ஓட்டத்துடனும் கோலி 9 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். அடுத்து வந்த சாம்சன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கே.எல்.ராகுலுடன் இணைந்து நிதானமான துடுப்பாட்டத்தை வழங்கினார். சஞ்சு சாம்சன் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தொடர்ந்து மனிஷ் பாண்டே 2 ஓட்டங்களுடனும் ஹர்திக் பாண்டியா 16 ஓட்டங்களுடனும் கே.எல் ராகுல் 40 பந்துகளில் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.
மத்திய வரிசையில் களமிறங்கிய ஜடேஜா பந்துகளை பவுண்டரி எல்லைக்கு வெளியே தெறிக்கவிட இருபது ஓவர்கள் நிறைவில் அணி 7 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் ஜடேஜா 23 பந்துகளில் 44 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ஹென்றிக்ஸ் மூன்று இலக்குகளையும் ஸ்ராக் இரு இலக்குகளையும் ஷாம்பா, ஸ்வெப்சன் தலா ஒரு இலக்குகளையும் சாய்த்தனர்.
162 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. பிஞ்ச்(35), ஸ்மித்(12), மக்ஸ்வெல்(2), சோட்(34) என அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். மத்திய வரிசையில் ஹென்றிக்ஸ் அதிரடி காட்டினாலும் வெற்றியிலக்கை அடைய முடியவில்லை. இருபது ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. பந்துவீச்சில் சஹால், தனது கன்னிப் போட்டியில் ஆடிய நட்ராஜன் ஆகியோர் தலா மூன்று இலக்குகளையும் சாஹர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சாஹல் தெரிவு செய்யப்பட்டார். (ரி4)

# முதல் தோல்வி

லங்கா பிறிமியர் லீக் தொடரின் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜப்னா ஸ்டாலியன்ஸை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றிபெற்றது கொழும்பு கிங்ஸ்.
ஹம்பாந்தோட்ட சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு கிங்ஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. ஜப்னா ஸ்டாலியன்ஸ் சார்பாக அவிஷ்க, சார்ளஸ் இணை களமிறங்கியது. சார்ளஸ் 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப அடுத்து வந்த பானுக, அவிஷ்கவுடன் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். அவிஷ்க 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தொடர்ந்து வந்த மலிக்(8), தனஞ்சய (2) ஏமாற்றினர். மத்திய வரிசையில் திசர பெரேரா 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க வனிந்து ஹசரங்க அதிரடியாக 23 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவித்தார். இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அஹமட் மூன்று இலக்குகளையும் சமீர இரு இலக்குகளையும் மத்தியூஸ், உதான, கௌசல், ரசல் தலா ஒவ்வொரு இலக்குகளையும் வீழ்த்தினர்.



149 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு கிங்ஸுக்கு ஆரம்ப வீரர் சண்டிமல் நிலைத்து நின்று நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்த இவன்ஸ்(14), மத்தியூஸ்(22), ரசல்(32) என தமது பங்குக்கு ஓட்டங்களைப் பெற 19.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.
துடுப்பாட்டத்தில் சண்டிமல் ஆட்டமிழக்காமல் 51 பந்துகளில் 68 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க இரு இலக்குகளையும் சதுரங்க டி சில்வா, தனது கன்னித் தொடரில் விளையாடிய யாழ்ப்பாண வீரர் வியாஸ்காந்த் தலா ஒவ்வொரு இலக்குகளையும் சாய்த்தனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சண்டிமல் தெரிவு செய்யப்பட்டார். (ரி4)

## 130 ஆக உயர்ந்தது 'கொரோனா' சாவு!

கொழும்பு, டிசெ.5
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் சாவடைந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்தார்.
பிலியந்தல பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.
கொரோனாவின் மூன்றாவது அலையின் தாக்கத்தால் இதுவரை 117 பேர் சாவடைந்துள்ளனர்.
அதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### வாய்க்கு....

யாது - தடை செய்யவும் முடியாது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அந்த இயக்கத்தின் அரசியல் கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கட்சியைத் தடை செய்தே தீருவோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியாகச் செயற்பட்டதில்லை. கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஆதரித்தார்கள் என்பதற்காக அதை விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சி என்று எவரும் அழைக்க முடியாது.
பிரதமர் மஹிந்த ராஜபக்ச அப்போது ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச குழு பல தடவைகள் பேச்சுக்களை நடத்தியதை சரத் வீரசேகர உள்ளிட்ட ஆளும் தரப்பினர் நினைவில்கொள்ள வேண்டும்.
கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி என்றபடியாலேயே அன்று எம்முடன் மஹிந்த அரசு பேச்சு நடத்தியது.
இன்றும் நாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுடன் உண்மையான - நேர்மையான - நீதியான பேச்சுக்குத் தயாராகவே இருக்கின்றோம்.
நாடாளுமன்றத்திலுள்ள ஆளும் தரப்பினர் கருத்துக்களை வெளியிடும்போதும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். வாய்க்கு வந்த மாதிரி இனவாத ரீதியில் கருத்துக்களை வெளியிடுவதை அவர்கள் தவிர்க்க வேண்டும்என்றார். (எ-22)

### வழிப்பறி...

குற்றச்சாட்டில் மானிப்பாயில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், இளவாலை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதியில் நடந்த வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்பாக இந்த நபர் தேடப்பட்டு வந்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
காங்கேசன்துறை பிராந்தியப் பொலிஸ் அத்தியட்சகர் சேனாதிராவி தலைமையில் இயங்கும் உப பொலிஸ் பரிசோதகர்கள் நிதர்சன், கலாநிநோதன் தலைமையிலான விசேட பொலிஸ் குழுக்கள் இந்த வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.
விசாரணைகளுக்கு அமைய, தெல்லிப்பளையில் உள்ள தனது சித்தியின் வீட்டில் சந்தேகநபர் ஒளித்திருந்த நிலையில், பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் 24 வயதுடையவர்.
இந்தக் குழு மோட்டார் சைக்கிள்களை முதலில் திருடி, அந்த மோட்டார் சைக்கிள்களில் சென்று வழிப்பறிகளில் ஈடுபடுவது விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏனையோர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடம் இருந்து 2 சங்கிலி, உருக்கிய நிலையில் ஒரு சங்கிலி, மோதிரம், தோடு என சுமார் 7 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடம் இருந்து திருட்டு நகைகளை வாங்கினர் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சந்தேகநபர்களிடம் இருந்து பெருமளவு நகைகளை வாங்கிய வர்த்தகர் ஒருவர் தலைமறைவாகவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.